# திராவிடநாடு

மலர் 6 | 7-9-47 | இதழ் 15


## ரிக்ஷாக்காரன் பேசினால்!

குந்தக் குடிலில்லை கூறையில்லை யில்லாளுக்
கெந்தன் குழந்தைக் கிதுபோ துணவில்லை;
காலணாக் காசேனும் கையி லிருப்பில்லை;
நாலணாக் கூலிக்கு நாலுமைல் ஓடுகின்றேன்;
தார்போட்ட பாதை தழலாய்ச் சுடுகிறது;
வேர்வைபெரு வெள்ளமாய் மேனியெலாம் பாய்கிறது

மூச்சுத் திணற முழங்கால் வலியெடுக்கப்
பேச்சின்றி யோடுகின்றேன் ரிக்ஷாப் பிடித்திழுத்து.
பிள்ளையார் போன்ற பெரியகன வானொருவர்
வெள்ளை யுடைபூண்டு வீற்றுள்ளார் ரிக்ஷாவில்.
கையில் கடியாரம் காதில் கடுக்கனவர்
பையில் பலநூறு பத்துரூபாய் நோட்டும்
இருக்கும் பொழுதவர்க் கென்னகுறையுண்டு?
சுருக்குவிழும் என்வயிறு சோறில்லாக் காரணத்தால்.

மாடாய் உழைத்தும் மகிழ்ச்சி யொன்றும் நானறியேன்,
பாடேதும் இன்றியவர் பல்வளமும் பெற்றுள்ளார்.
மேலைத் தவத்தினால் மேவுவது செல்வமென்று
நூலைப் படித்துணர்ந்த நுண்ணறிஞர் கூறுகின்றார்;
எல்லாம் இறைசெயலென் றெண்ணி யிருப்பதுவே
அல்லாமல் வேறுசெய ஆகுமோ வென்கின்றார்.

பல்லாயிர மக்கள் பட்டினியால் வாடிடவும்
எல்லாச் சுகமும் இயைந்தொருவன் வாழ்வது தான்
ஆண்டவன் நீதியென்றால் ஆண்டவனை மாண்டிடுவான்.
வேண்டாம் இதுபோல் விபரீதப் பேச்செல்லாம்.
மக்கள் அனைவர்க்கும் வாழ்வின் பயனடையத்
தக்க படி வாய்ப்புத் தந்திடுதல் தான் நீதி.


**எம். ஆர். பெருமாள்**
*தலைமை ஆசிரியர்*
*முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி சென்னை.*

13-ம் பக்கத் தொடர்ச்சி

என்றெல்லாம் கூறப்பட்டு, அவரவர்கள் கொடுத்துவைத்தபடி அவரவர்களின் வாழ்க்கைத் தரங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன என்ற மோசடி நடைபெற வழி கோலப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமை மாறி மக்கள் மக்களாய் மானத்தோடு வாழவேண்டுமென்பதற்காகவே, புராண இதிகாசங்களில் உள்ள மன்பதைக் கொவ்வாக் கொடிய பழக்கவழக்கங்கள் மக்கள் மனதில் பதியாது தடைசெய்ய வேண்டுமென்று பகுத்தறிவாளன் கூறுகின்றான். இப்படிக்கூறப்படுவதை மதப்பகைமையென்றோ நாத்திகமென்றோ நல்லறிவுடைத்த எவரும் கூறமாட்டார்கள்.

இனி, 'ஈசத்துவம்' என்று சொல்லப்படும் சித்திக்குக், கடவுளைப் போல் முத்தொழில் செய்து, எவரும் பணிகேட்ப நிற்பது என்று கூறப்பட்டிருக்கும் பொருள் விளக்கம், மக்களும் கடவுளராகலாம்; கடவுள் செய்வதாகச் சொல்லப்படும் படைத்தல்—காத்தல் — அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் மக்களும் செய்யலாம் என்று விரிந்த பொருள் கொள்ளும் முறையில் விளக்கப்பட்டிருக்கிறது இது, கடவுளோடு போட்டிபோட்டு வெற்றியடைந்து, கடவுள் இருக்கும் இடத்தில் (அந்த இடம் யாருக்கும் தெரியாது) இருந்துகொண்டு, கடவுளுடைய காரியத்தை (அவர்தான் அந்தக் காரியங்களைச் செய்கிறார் என்பதைக் கண்டவர்கள் யாருமில்லை) மக்கள் செய்வதென்பது; கடவுள் தன்மைக்கே இழுக்கை உண்டாக்கக் கூடியதாக இருப்பதால், அட்டமா சித்திகளில் காணப்படும் 'ஈசத்துவம்' என்றபகுதியை நீக்கி விடவேண்டுமென்று சில கடவுளடியவர்களே கருதுவார்களாகையால், முதலில் இந்தச்சிக்கல் திரட்டும் என்று இதனை மேற்கொண்டு ஆராயாமல் இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, அட்டமா சித்திகளில் கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கும் 'வசித்துவம்' என்பதைச் சிறிது ஆராய்வோம்,

'வசித்துவம்' என்பதற்கு எவ்வுயிரும் தன்வயப்படுவது என்று பொருள் கூறப்பட்டுளது. இதுவும் 'பிராத்தி'யைப் போல் மக்கள் அனைவராலுமே இன்று செய்யப்படக் கூடிய காரியம் என்ற போதிலும், இதில் ஒரு சிறிய வேறுபாடு மட்டும் உளது, அதாவது, 'பிராகாமியம்' என்ற சித்தியில் கூறப்பட்டபடி, ஓரிடத்தில் இருந்துகொண்டே எல்லாப் போகங்களையும் பெற்று நுகரும் இயல்பினையுடையவர்களை மட்டும் வசித்துவத்தில் அதாவது, எவ்வுயிரையும் தன்வயப்படுத்துவது என்பதில் சேர்த்துக்கொள்ள முடியாது. இவர்கள் ஒருசிலர் நீங்கலாக மற்றை உயிர் அனைத்தையும், சிங்கம், புலி, கரடி, யானை, பாம்பு உட்பட எல்லா உயிர்களையுமே ஒருவன் தன் வயப்படுத்தலாம்— தன்வயப்படுத்துகின்றான். நாம் பார்க்கிறோம். பார்க்கும் நாமும் அந்தக் காரியத்தைச் செய்யலாம் விரும்பினால்—தேவைப்பட்டால்! ஆனால் பிராகாமியத்துக்குப் போட்டியாக அதாவது, ஓரிடத்தில் இருந்தபடியே எல்லாப் போகங்களையும் பெற்றுநுகர்வோராயும், அதனால், பலகோடி மக்கள் உண்ண உணவும் உடுக்கக் கூறையுமின்றி அலைந்து திரிவதற்குக் காரணமாயும் உள்ள அந்த ஒருசிலரைத் தன்வயப்படுத்தக்கூடிய ஒரு சக்தி ஒன்று ஒன்பதாவதாகவோ அல்லது பிராகாமியத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் சேர்க்கக்கூடியதாகவோ அமைத்தாலாவது, ஏதோ அந்தச் சித்திகளால் மக்களுக்குச் சிறிதளவாவது நன்மை ஏற்படுகின்றதென்று ஒப்புக்காவது! மன அமைதி பெறலாம். ஆனால் இங்கு பேசப்படும் சித்திகள் மக்களின் சிந்தனையைக் கலக்கி அவர்களின் வாழ்வைச் சிதைக்கும் முறையில் பேசப்பட்டுள்ளனவே. (தொடரும்)


## வெளிவந்து விட்டது!

(C. N. A. எழுதியவை)

1. ஆரிய மாயை (2ம் பதிப்பு) ரூ. 1 0 0
2. மே தினமும் திராவிடர் கழகமும் 0 5 0

——

(புதுவைச் சிவம் எழுதியவை)

3. தன் மதிப்புப் பாடல்கள் 0 6 0
4. மறுமலர்ச்சிக் கவிதைகள் 0 8 0
5. கோகில ராணி நாடகம் 1 0 0

(தபாற் செலவு வேறு)

ஏஜண்டுகள் தேவை.

தனிப் புத்தகம் வேண்டுவோர், புத்தக விலைக்குமேல் 2 அணா சேர்த்து அனுப்புக.

மானேஜர்:

**"ஞாயிறு நூற்பதிப்பகம்"**

பாண்டிச்சேரி.

## வைத்தியப் பேராசிரியர்

1947 ஆகஸ்டு 9—10 தேதிகளில் லால்குடியில நடந்தேறிய சென்னை மாகாண சித்த வைத்ய மகாநாட்டில் வைத்ய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களுக்கு "வைத்யப் பேராசிரியர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

விரைவில் வெளிவருகிறது!

தமிழ் இலக்கியவுலகில் ஒரு புதுமை!!

## "காரல் மார்க்ஸ்"

வெளியிடுவோர்:—

**இன்ப வாழ்வுப்பதிப்பகம்**

R. S. புரம். P. O. கோயமுத்தூர்.

# திராவிடநாடு பிரிவினை மாநில மாநாடு

14—9—47 ஞாயிறன்று கூடலூர் ஒ. டி. (கூடலூர் ஜங்ஷன்) தோழர் ஏ. சி. கோவிந்தன் அவர்கள் திடலில அமைந்திருக்கும் அருச்சுனன் பந்தலில் நடைபெறும்.

தலைவர்: **எஸ். முத்தையா** (முன்னாள் அமைச்சர்)

திறப்பாளர்: **டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி**

கொடியேற்றுபவர்: **பி. பாலசுப்ரமணியம்**

(சண்டே அப்சர்வர் ஆசிரியர்)

பெரியார்படத்திறப்பு:

**தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்.**

**பெரியார் ஈ. வெ. ரா. தோழர் டி. பி. வேதாசலம் மற்றும் பலர் பேசுவர்.**

வரவேற்புக் குழுத் தலைவர்: வீ. கே. எஸ். சண்முகசுந்தரம்

வரவேற்புக்குழுச் செயலாளர்: சி. முனுசாமி

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

திராவிடநாடு

விலை 2 அணா ஆண்டுசந்தா ரூ 7

# சித்தத்தைக் கலக்கும் சித்திகள்!

[நக்கீரன்]

கயிலாயத்திலே ஒரு முனிவர் இருந்தார். அவர், அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். அவருக்கு, அகத்தியருடன் சிலநாள் தங்க வேண்டுமென்ற வேட்கை எழுந்தது. எனவே கயிலையை விட்டுப் பொதிகையை நோக்கப் புறப்பட்டார். வருகின்ற வழியில், சாத்தனூர் என்னும் இடத்தில், மாடு மேய்க்கும் ஒரு இடையன், மூலன் என்னும் பெயரை உடையவன், மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், திடீரென இறந்துவிட்டான், அதை அந்தக் கயிலை முனிவர் கண்டு, தம்முடைய சித்திகளில் ஒன்றான கூடு விட்டுக் கூடு பாயும் சித்தியால், தம்முடைய உடலை ஓரிடத்தில் சேமித்துவிட்டு, இடையன் உடலில் நுழைந்து மூலனாய் எழுந்து, மாடுகளை மேய்த்து, மாலைப் பொழுதானதும், பசுக்கள் வழக்கம்போலச் சாத்தனூரை நோக்கி நடந்து தத்தம் இல்லம் நுழையத், திருமூலர் தெருவில் நின்றார்.

மூலன் மனைவி தன் கணவன் வாராதது கண்டு, தெருவில் வந்து பார்த்தாள். மூலன் வடிவில் நின்ற முனிவரை அணுகி, "ஏன் இங்கு நிற்கிறீர்! யாதாயினும் தீட்டோ" என்று கேட்டவண்ணமே அவரைத் தீண்டப்போனாள். மூல—முனிவர் அவளை நோக்கி, "நீ என்னைத் தீண்டாதே; எனக்கும் உனக்கும் எவ்வித் தொடர்பும் இல்லை" என்று கூறிவிட்டுத், திருவாவடுதுறை என்னும் ஊருக்குப் போய், அங்கே மூவாயிரம் ஆண்டு உயிரோடு இருந்து, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் (திருமூலர் திருமந்திரம்) பாடி முடிக்க பின்னர் கயிலைக்குப் போய்விட்டார் என்ற ஒரு நிகழ்ச்சியும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றது.

எனவே, இந்நிகழ்ச்சியில் பேசப்படும் கயிலை முனிவர், அணிமா முதலிய சித்திகளில் வல்லவராய் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அதாவது, அணிமா — மகிமா — லகிமா — கரிமா — பிராத்தி — பிராகாமியம் — ஈசத்துவம் — வசித்துவம் என்று சொல்லப்படும் எட்டுவித சித்திகளில் வல்லவராய் இருந்தார். இச்சொல்லப்படும் எட்டுவித சித்திகள் எப்படிப்பட்டவை என்பது குறித்த எமது கருத்து ஒருபுறமிருக்க, முதலில், மதநூலார் அவற்றிற்குக் கூறும் விளக்கம் எப்படிப்பட்டவை என்பதை அறிவோம். அதாவது:—

1. அணிமா:— அணுவினும் சிறிய வடிவம் கொள்வது.

2. மகிமா:— எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது.

3. லகிமா:— மேருவைப்போல் இருந்தும் எடுக்கும்போது லகுவாய் இருப்பது.

4. கரிமா:— பரமாணுவைப் போல் இருந்தும் எடுக்கும்போது மேருவைப்போல் கனப்பது.

5. பிராத்தி:— எங்கும் போகும் ஆற்றலோடு எல்லா வளங்களையும் பெறுவது.

6. பிராகாமியம்:— ஓரிடத்தில் இருந்தபடியே எல்லாப் போகங்களையும் பெற்று நுகர்வது.

7. ஈசத்துவம்:— கடவுளைப் போல் முத்தொழில் செய்து, எவரும் பணி கேட்ப நிற்பது.

8. வசித்துவம்:— எவ்வுயிரும் தன் வயப்படுவது.

இவைதாம் அட்டமா சித்திகளுக்கு மதநூலாரால் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்கள்.

இவற்றில், முதற்கண், அணிமா என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம், அணுவினுஞ் சிறிய வடிவம் கொள்வதென்பது குறித்து ஆராயலாம் என்று தொடங்கும்போது, எனக்குத் திருக்குறளைப் பற்றிய நினைவுதான் முதலில் வந்தது. அதாவது, திருக்குறளின் சிறப்பைக் குறித்துக் கூறவந்த இடைக்காடர் என்பார்,

> "கடுகைத் துளைத்து எழ்
> கடலைப் புகட்டிக், குறுகத்
> தறித்த குறள்."

என்றும், ஔவையார்,

> அணுவைத் துளைத்து எழ்
> கடலைப் புகட்டிக், குறுகத்
> தறித்த குறள்"

என்றும் கூறியுள்ளனர். குறட்பாவின் சொற்சுருக்கத்தையும், அதனுள் அடக்கப்பட்டுள்ள பொருள்விரிவையும் சிறப்பிக்க வந்த இடைக்காடர், உலகிற் காணப்படும் பொருள்களுள் கடுகே சிறிய அளவைக் குறிக்க உகந்த ஒரு நுண்பொருளாகலின், அதனைத் தாம் கூறவந்த பொருளுக்கு மேற்கோளாக எடுத்தாண்டார். ஔவையார், இடைக்காடருக்கு ஒரு படி மேலே சென்று, கடுகைவிட அளவில் சிறியதும், இனி ஒருபொருள் அதற்குச் சிறியதாக எடுத்துக்காட்ட முடியாததுமான அணுவையே மேற்கோளாக எடுத்தாண்டு, அதனைத் துளைத்து எழ்கடலைப் புகட்டியது போன்றது, குறட்பாவின்சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்டுள்ள பொருள் விரிவும் என்பதை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். இதனால், உலகிற் காணப்படும் பொருள்

களுள் அணுவே அளவில் மிகவுஞ் சிறிய—நுண்ணிய பொருள் என்பது பெறப்படுகின்றது. ஆனால், ஈண்டுப் பேசப்படும் "அணிமா" என்ற சொல்லுக்குப் பொருள் விரித்தவர்கள், அதற்கு, அணுவை விடச் சிறிய வடிவம் கொள்வது என்று விளக்கம் கூறியுள்ளனர். இவர்களுடைய கூற்றுப்படி அணுவை விட இன்னும் சிறிதா ஒரு பொருள், அளவில் சிறியதாக வேறு ஒரு பெயரோடு உளது என்றன்றோ தெரிகிறது. அப்படி ஒரு பொருள் இருப்பின், அப்பொருளைக் குறிக்கும் ஒரு பெயரும் இருத்தல் வேண்டுமன்றோ! யாது அப்பெயர்? யாது அப்பொருள்? அணு, ஒரு பொருள்; எனவே அதற்கு ஒரு பெயரும் இருக்கிறது. அதுபோலவே, அணுவைப் பார்க்கினும் சிறிய பொருள் ஒன்று உண்டென்றால், அதன் பெயர் இன்னது என்பதற்கும், அப்பொருள் 'இதுதான்' என்பதற்கும் விளக்கம் வேண்டுமன்றோ! காணப்படும் ஒவ்வொரு வடிவத்திற்கும் பேசப்படும் ஒவ்வொரு பெயரும் இருத்தலைக் காண்கின்றோம். ஆனால் இங்கு காட்டப்படும் அணுவினுஞ் சிறிய வடிவத்திற்குப் பெயர் யாதென்பது பேசப்படாமல், அணுவினுஞ் சிறிய வடிவம் என்று மட்டும் கூறிவிட்டால், அப்பொருள் இன்ன பெயருடையது என்று தெரிந்துவிடுமா? அல்லது அது, இன்ன தன்மையைக் கொண்டது, இன்ன காரியத்திற்குப் பயன்படுவது என்று புரிந்துகொள்ளத்தான் முடியுமா?

அணு என்ற பெயரால் அழைக்கப்படும் பொருள், இன்று, அணுகுண்டாக (Atom Bomb) மாறி அகிலத்தையே அழித்தொழிக்கும் நிலைமையைப் பெற்றிருப்பது போல், இங்கு பேசப்படும் அணுவினுஞ் சிறிய வடிவமும் யாதாயினும் ஒரு காரியத்திற்குப் பயன்படுகின்றது என்பதற்கும் விளக்கம் இல்லை. வறிதே அணுவினுஞ் சிறிய வடிவம் என்ற அளவோடு கதையைமுடித்துவிட்டால், அந்தச் சிறியவடிவம், எதற்கு-யாரால்-எப்போது பயன்படுத்தப்படுகின்றது என்பது புரிந்துவிடுமா? யாதாயினும் ஒன்றைப்பற்றிக் கூறினால், கூறப்பட்ட அப்பொருளுக்கு விளக்கமும் வேண்டுமே! புரிந்துகொள்ள முடியாதவை — புரிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாமை இல்லாதவை எவையெவை உண்டோ அவற்றையெல்லாம் உள்ளடக்கியது தானே புராணங்கள்; அப்படியிருக்க, அத்தகைய புராணங்களில் ஒன்றை எடுத்துவைத்துக்கொண்டு, "அது புரியவில்லையே! இது விளங்கவில்லையே!" என்றுகூறி, வாளா இருப்பதற்கும்முடியவில்லையே! புராணங்கள் நம்மவர் உள்ளங்களில் புகுந்து படுத்துறங்கின்ற பாட்டையும், அதனால் அவர்கள் அறிவும் பொருளும்—காலமும் பாழ்படுவதையும் பார்க்கும் போது தான், புராணங்களைப் புரட்டிப் பார்க்கவும், அவை தம்முள் அடங்கிக்கிடக்கும் பொய்ம்மை — புளுகு — பொருந்தா உரை ஆகியவற்றை நம்மவர்க்கு எடுத்துக்காட்டி அவற்றால் நாம் அடையும் பயன்பாதொன்றும் இல்லையென்று விளக்கவுமான நிலை ஏற்படுகின்றது.

இனி, இங்கு பேசப்படும் அணுவினுஞ்சிறிய வடிவம் என்பதற்கு, அணுவிலேயே சிறிய வடிவம் கொண்டு, அந்தச் சிறியவடிவமும் அணு என்ற பெயராலேயே அழைக்கப்படும் என்று பொருள் கொள்வதற்கு இல்லையே! எப்படியென்றால், அணுவைப் பிளந்து காணப்படும் அந்தச் சிறியஅணுவுக்கு, 'அணுவுக்கணு' என்றும் 'பரமாணு' என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால் இங்கு பேசப்படும் 'அணுவினுஞ் சிறிய வடிவம்' என்பதற்கு மேலே சொல்லப்பட்ட இரண்டு பெயர்களும் பொருந்தாது; பொருத்தி அழைப்பதும் கூடாது ஏனென்றால், அப்பெயர்கள் அதற்குப் பொருந்துமாயின், அதனை, அணுவினுஞ் சிறிய வடிவம் என்ற பெயரால் குறிக்காமல், அணுவுக்கணு என்றோ பரமாணு என்றோ குறித்திருப்பார்கள். அங்ஙனம் குறிக்கப்படாதது, அது, அப்பெயர்களால் அழைக்கப்படக் கூடிய பொருள் அல்ல என்பதையும், அதற்கு வேறுபெயர் ஒன்று உளது என்பதையுமே நன்கு வலியுறுத்தி நிற்கின்றது. ஆனால், அப்பொருளுக்கு வேறுபெயர் எதுவும் குறிக்கப்படாமல், அதனை, 'அணுவினுஞ் சிறிய வடிவம்' என்று மட்டுமே குறித்திருப்பதால், அப்படி ஒரு பொருள் யாண்டும் இல்லை—இருக்க முடியாதென்பது பெறப்படுவதோடு, அட்டமா சித்திகளில்முதலாவதான 'அணிமா' என்பதில் அலங்கோலமேயன்றி, அணுவளவும் உண்மையில்லையென்றும் ஒழிக.

இனி, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது என்பதைப் பொருளாகக் கொண்டுபேசப்படும் 'மகிமா' மதியுடையோரால் பொருளெனக் கொள்ளப்படாது இகழ்ந்தொதுக்கப்படும் நிலையையே பெற்றுள்ளது. எப்படியென்றால், எங்கும் நீக்கமறநிறைந்து நிற்பது என்ற சொற்றொடரை ஊன்றி நோக்கின் அதனுள் அடங்கிக் கிடக்கும் உண்மைப் பொருளை உணர முயலும்போது, அதன் பொய்ம்மை அங்கை நெல்லிக்கனியென அறியப்படுகின்றது. ஒரு பொருளானது எல்லா இடத்திலும் நீக்கம் அற நிறைந்து நிற்பதென்றால், அப்படி நிற்கும் ஒரு பொருளை யார்—எப்படி?—எங்கிருந்து காண்பது? காட்சிப்பொருள், தான் நிற்பதற்கே இருக்கின்ற இடம் முழுவதையுமே தனக்காக ஆக்கிக் கொண்டபின்னர், அப்படி நிற்கும் ஒரு பொருளைக் காண்பவன் எங்கு நின்று காண்பது? அவன் நின்று காண்பதற்கு இடம் ஏது? காட்சிப் பொருள், காணப்படும் இடம் முழுவதையும் கவர்ந்துகொண்ட பின்னர், காண்பானுக்கு, அப்பொருளை, நின்று கண்டறிவதற்கு ஒரு இடம் வேண்டுமன்றோ!

'மகிமா' என்பதற்குப் பொருள் விரித்தவர்கள், அதற்கு, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது என்று பொருள் கொள்ளாமல், ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில்-10 அடியோ, 100 அடியோ ஆயிரமடியோ அகல நீளமான ஒரு இடத்தை அளவுபடுத்தி, அந்த இடத்திற்குள், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது என்று பொருள் கொண்டாலாவது, அந்தப்பொருளை, அந்தப்பொருள் இருக்கும் இடத்திற்கு அப்பால் நிற்பவன் காணமுடியும்; "இது, இந்த இடம் முழுவதையும் கவர்ந்து நீக்கமற நிற்கின்றது" என்று கூறமுடியும். அங்ஙனமன்றிக், காட்சிப் பொருள், காணப்படும் இடம் முழுவதையும் தான் நிற்பதற்கே இடமாக்கிக் கொண்ட பின்னர், அதனைக் காண்பான் ஒருவன், வேறெங்கோ ஓரிடத்தில் நின்று கொண்டு, அந்த எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற பொருளைக் கண்டான் — காணமுடியும் என்று கூறுவது கற்பனையையும் கடந்து நிற்கும் ஒரு கரையிறந்த பெரும் புளுகென்று கடைப்பிடிக்க.

(13-ம் பக்கம் பார்க்க)

# ★ இழிவை யொழித்த எலிஜபெத் ★

[இராதாமணாளன்]

“அந்தப் பிரபுவை ஏன் முறைத்துப் பார்த்தாய்? அதனால் உனக்கு ஆறுமாதம் சிறைத் தண்டனை!”

“மடையனே! ரொட்டி திருடியது தவறாயிற்றே! ஒருவருஷம் உனக்குக் கடுங்காவல்!”

“ஹேரி! வாங்கிய கடனைக் கேட்டால் கோபித்தாயாமே? என்ன கர்வமடி உனக்கு! இரண்டு ஆண்டுகள் சிறையிலிரு, புத்திவரும்!”

“இல்லையென்று பொய் சொல்லுகிறாய்? பொய் சொல்லியதற்காக ஐந்தாண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிட!”

“டேவிட்! அவனை நீ திட்டியது மன்னிக்க முடியாத குற்றம், ஆகவே உன்னை நாடு கடத்தியுள்ளோம்!”

“கசடனே! கள்ளக் கையெழுத்திட்டது பெருத்த குற்றம். குற்றம் செய்த உனக்கு ஆயுள் தண்டனை கொடுத்திருக்கிறோம்!”

“ஏ, மூர்க்கா! அடிப்பேனென்று அவனைப் பயப்படுத்தினாயாமே! .... தூக்குத்தண்டனை....!”

“மனைவியை அடித்தாயாமே, மடையா! உனக்குத் தூக்குத் தண்டனை!”

இப்படி இருநூறாண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்திலே, நீதி மன்றங்களிலே “நல்ல தீர்ப்பு”கள் வழங்கப்பட்டன! சிறு சிறு தவறுகளுக்கெல்லாம் சிறை, நாடு கடத்தல், ஆயுள் தண்டனை, தூக்குத் தண்டனை கிடைத்து வந்தன.

சிறையிலே கைதிகளை மிதமிஞ்சி வேலைவாங்குவது, மிகமிகக் குறைந்த உணவே தருவது, சிறையிலே காற்றுச் சரியாக வராமல் தடைபடுத்தி வைப்பது, நோய் வந்தாலும் கைதிகளைப்பற்றிக் கவலைப்படாமலிருப்பது, மரணமே அவர்கள் எதிர்வந்து நின்றாலும், வைத்தியர் அவர்கள் எதிர்வந்து நிற்கவும் மறுப்பது— இது அன்றைய வேதனைக்குள்ளாகிய கைதிகளின் நிலைமை!

“இது அநியாயம்! அக்கிரமம்! கைதிகளும் மனிதர்கள்தான்! வாழ்க்கையில் ஏதோ சிறிது தவறினார்களென்பதற்காக இப்படியா அவர்களைச் சித்திரவதை செய்வது! கூடாது, அடுக்காது, உடனே அக்கிரமத்தை ஒழிக்க முன்வாருங்கள். கைதிகளிடம் ஈவு இரக்கம் காட்டுங்கள்!” இப்படி யாரும் அக்காலத்தில் சொல்லவில்லை. சொல்லவில்லை யென்பது மட்டுமல்ல, இதுபோன்ற கருத்தே யார் உள்ளத்திலும் எழாத காலம் அது!

அகங்காரம், அறியாமை என்ற மேகம் உலகைக் கவ்விக்கொண்டிருந்த அந்த நேரத்தில், இடியிடித்ததுபோல ஒரு குரல் உரக்கக் கேட்டது, “இது தகுமா? மனித தர்மமா?” என்று. அந்தக் குரலைக் கேட்டோர் திடுக்கிட்டனர். அந்தக் குரல் ஒரு பெண்ணின் குரல் என்று தெரிந்ததும் கேலிச் சிரிப்புச் சிரித்தார்கள்!

“யார் இந்தப் பெண்?....எலிஜபெத் பிரை! .... .... எவ்வளவு முட்டாளப்பா இவள். தானொருவள் கத்திவிட்டாலே, தரணியே தலைகீழாக மாறிவிடுமென்று எண்ணுகிறாளே! என்னே இவளது பேதைமை!” என்று நையாண்டி செய்தார்கள் நாட்டார்கள். சிறு பொறிதான் பெரும் நெருப்பாகிறது என்ற உண்மை அன்று அவர்கள் நினைவிற்கு வரவில்லை.

நார்விச்சுக்கு அருகே ஏர்ல்ஹாம் (Earlham) என்ற ஊரிலே, 1780 ஆம் ஆண்டு மேத் திங்கள் 21 ம் தேதி எலிஜபெத், ஜான் கர்னி (John Gurney) என்ற செல்வனின் மகளாகப் பிறந்தாள். எலிஜபெத் ஆசையோடும் அன்போடும் வளர்க்கப்பட்டாள்! ஊக்கத்தோடு படித்து நல்ல அறிவையும் பெற்றாள். வருடங்கள் பறந்தன. குழந்தை குமரியானாள்!

குமரி எலிஜபெத் லண்டனுக்குச் சென்று பற்பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். நாடகசாலைகளுக்குச் சென்று, நாடகங்களைக் கண்டு களித்தாள். நடனசாலைகளுக்குச் சென்று நடனமாடி மகிழ்ந்தாள். தன் தோழியர்களோடு இன்பமாகச் சில நாட்களைக் கழித்தாள்.

எலிஜபெத் தன் ஊருக்குத் திரும்பினாள். அவள் மனக்கண் முன்பு லண்டன் இன்பக் காட்சிகள் தோன்றியவண்ணமிருந்தன. ஆனால் சிலநாட்களில் அந்த இன்பம் அவளுக்குப்பிடிக்காமல் போயிற்று.

“நான், எல்லோரும் சுவைக்கும் அந்த இன்பத்தைத்தான் நுகரப்பிறந்தேனா? இல்லை! நான் ஏதாவது புதுமையாகச் செய்யவேண்டும். அந்தப் புதுமையில்தான் இன்பமிருக்கிறது. ஏழை எளியவர்களுக்காக உழைக்க வேண்டும், பிறருக்கு நன்மை செய்யவேண்டும், அதிலேதான் உண்மையான இன்பமிருக்கிறது. அந்த இன்பம், துன்பமாக மாறியோ, அன்றிக் காலத்தால் குறைந்தோ போகாது! நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்லும் இன்பமது!” இப்படி எண்ணியது அவளது உள்ளம்.

மனம் உரைத்தப்படியே மக்களுக்காகத் தொண்டாற்றவும் தொடங்கினாள். அந்தக்காலத்தில் சிறு கிராமங்களில் பாடசாலைகள் கிடையாது. ஆகவே தன்னூரிலே ஒரு பாடசாலையை ஏற்படுத்திக் குழந்தைகளுக்கு அறிவைப் புகட்டி வரலானாள்.

1800 ஆம் ஆண்டு ஜோசப் பிரை (Joseph Fry) என்ற வாலிபனை மணந்து, தன் கணவனுடனே லண்டனுக்குச் சென்று வசிக்கலானாள். லண்டனிலும் தன் தொண்டினைத் தொடர்ந்து செய்துகொண்டு வந்தாள். ஏழை நோயாளிகளைக் கண்டு, அவர்களது நோய்க்கேற்ற மருந்தளித்து அவர்களைக்காப்பாற்றினாள். ‘ஐயோ’ என்ற சோகக்குரல் கேட்கும் இடங்களுக்குச் சென்று, ஆதரவற்ற அநாதைகளுக்குத் தன்னால் இயன்ற அளவு உதவிகள் செய்து வந்தாள்.

இதற்கிடையே அவளது கணவனின் தகப்பனார் இறந்துவிடவே, எலிஜபெத்தும், அவள் கணவனும் ராஸ்பெட் (Rashet) என்ற ஊருக்குச் சென்று, அங்கு தங்கினார்கள். அந்த ஊர் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. என்றபோதிலும் அவளது கவனமெல்லாம் ஏழைகளின்மீதுதான் இருந்தது.

தன் கணவனின் மனத்திற்கு மகிழ்ச்சியளித்துக்கொண்டும், ஏழைகளுக்குத் தொண்டாற்றிக் கொண்

டும் இன்பமாக ஒன்பது ஆண்டுகளைக் கழித்தாள்.

கணவனோடு மகிழ்ச்சியுடன் இருக்கும் நேரங்களில், அடிக்கடி அவனுக்குத் தன் இலட்சியத்தைச் சிறிது சிறிதாக எடுத்துக் கூறி வந்தாள். அவனும் அவளது உயர்ந்த குறிக்கோளை அறிந்து, அகமகிழ்ந்து அவளது விருப்பப்படியே தீவிரமாகத் தொண்டில் ஈடுபட ஆதரவு அளித்தான்.

முன்பைவிட முழுமுரமாகவும், உற்சாகத்தோடும், உறுதியோடும் பராரிகளுக்காகப் பணியாற்றி வரலானாள். தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கு நன்மை செய்வதிலும், ஏழைகளின் நிலைமையை உயர்த்துவதிலும், செலவளிக்கத் தீர்மானித்தாள். 1809 ஆம் ஆண்டு எலிஜபெத் முதன்முறையாகச் சொற்பொழிவுகளுக்காக வெளியே செல்ல ஆரம்பித்தாள். ஊரெங்கும் அலைந்து உண்மையை எடுத்துக் கூறினாள்.

முதலில் அவள் பேச்சை மிகச் சிலரே கேட்டார்கள். நாளாக நாளாக அவளது சொற்பொழிவை மக்கள் திரள் திரளாக வந்து, கேட்டு மகிழ ஆரம்பித்தார்கள். அவளது இனிமையான பேச்சில், எளிதில் அனைவரும் வசமாயினர். அவளது பேச்சைக் கேட்ட சகலரும், அவளைப் புகழத் தொடங்கினர். அவளது நாவன்மை நாட்டாரைத் தன் கருத்தைச் சுலபத்திலே ஒப்புக்கொள்ளும்படி செய்தது.

"எவ்வளவு அழகாகப் பேசுகிறாள் எலிஜபெத்! அந்தப் பேச்சில் தான் எவ்வளவு தெளிவு, பொருள், அழகு, கவர்ச்சி....ஆஹா! இவள் ஒரு பெரிய பேச்சாளியாகவே உலகில் பிறந்தாள் போலும்!" என்றனர், அவளது அழகும் பொருளும் நிறைந்த சொற்பொழிவைக் கேட்டோர். உயரிய அவளது கருத்துக்கள் மக்களின் உள்ளங்களில் ஊடுருவிப் பாய்ந்தன.

அவள் பேசும் கூட்டத்தில் காலித்தனம் செய்யவேண்டுமென்ற கருத்துடனே பலர் வருவார்கள். காலித்தனம் செய்ய வேண்டுமென்று கருதி வந்தவர்களும், அவளது தேனினும் இனிய மொழியைக் கேட்டு, மனமாற்றமடைந்து, மங்கையைப் புகழ்ந்துவிட்டுச், சித்தம் தெளிந்து உண்மையறிந்து வீடு திரும்புவார்கள். இப்படியாகத், தன் எதிரிகளும் சுலபத்திலே தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளும் அளவிற்கு, அவள் பேச்சிலே கவர்ச்சியிருந்தது.

எலிஜபெத் முதன் முறையாக 1818 ஆம் ஆண்டு நியூகேட் (Newgate) சிறைச் சாலைக்குச் சென்று, அங்கிருந்த கைதிகளைக் கண்டாள். அவள் நெஞ்சம் பதை பதைத்து, முக்கியமாகப் பெண் கைதிகளின் பரிதாப நிலைமையைக் கண்டு கண்ணீர் கசிந்தாள்.

சிறையை விட்டு வெளியே வந்ததும், இந்த மோசமான நிலைமையை மாற்றவேண்டும், அநியாயத்திற்குப் பெற்று அவதிப்படும் அநாதைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக அல்லும் பகலும் தளராது பாடுபடலானாள். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கு ஆறுவார், தேற்றுவாரற்றுக் காவலில் மூழ்கிக்கிடந்த கைதிகளுக்குத் தன்னால் முடிந்த அளவு உதவிகள் செய்தாள். தாய்ப் பசுவின் வருகையை எதிர்பார்க்கும் கன்றைப்போல, கைதிகள் எலிஜபெத்தின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தபடியிருப்பார்கள்.

அதிகாரிகளைக் கண்டு, சிறைகளில் நடைபெறும் அக்கிரமங்களை யெடுத்துக் கூறினாள். முதலில் அவர்கள் அசட்டை செய்தபோதிலும், நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகச் சிறைச் சட்டங்களில் மாற்றங்கள் செய்ய ஆரம்பித்தார்கள்.

நாட்டிலே, அங்கங்கு சிதறிக் கிடந்த தொண்டர்களை ஒன்றுசேர்த்துத் திரட்டி, நியூகேட் சிறையிலடைக்கப்படும் கைதிகளுக்கு உதவியளிக்க, ஒரு சங்கத்தை 1817 ஆம் ஆண்டு ஆரம்பித்தாள்.

சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் சென்று, சங்கத்தின் கொள்கைகளையும், நாட்டிலே நடைபெற்று வரும் அநியாயங்களையும், சிறையிலே வாடும் கைதிகளின் பரிதாபத்தையும் எடுத்துக் கூறினார்கள். குடிகள் சங்கத்தாருடன் ஒத்துழைக்கவும், உதவி செய்யவும் ஆரம்பித்தார்கள். மக்கள், சங்கத்திற்கும், எலிஜபெத்திற்கும் காட்டிவந்த அன்பையும் மரியாதையையும் கண்ட அதிகாரிகள், எலிஜபெத்தின் சொற்களுக்கு மதிப்புத் தரவும், அதன்படி சிறையில் சிறுகச் சிறுகச் சீர்திருத்தங்கள் செய்யவும் சித்தமானார்கள்.

சிறையிலே பிறந்து வளர்ந்து வந்த குழந்தைகள் எலிஜபெத்தின் கண்ணையும் கருத்தையும் அதிகமாகக் கவர்ந்தன.

அதிகாரிகளை அணுகி, அந்தக் குழந்தைகளுக்கு அறிவு புகட்ட, சிறைக்குள்ளாகவே ஒரு பாடசாலையை ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டினாள். அதிகாரிகள் 'சரி' யென்று அநுமதி தந்ததும், அவளே அங்கொரு பாடசாலையை ஆரம்பித்து வைத்தாள். அந்தப் பாடசாலைக்குக், கடிகாரம் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுச் சிறைக்குள் வந்திருந்த மேரி கன்னர் என்ற அணங்கை, ஆசிரியையாக அமர்த்தினாள். மேரி கன்னரும் குழந்தைகளுக்கு அன்போடும், ஆர்வத்தோடும் பாடங்களைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்தாள்.

சங்கத்தார், எலிஜபெத்தின் யோசனையின்படி, கைதிகளின் நலத்திற்காகப் பற்பல திட்டங்களைத் தீட்டிச், சிறைக் கவர்னரிடம் தந்தார்கள். கவர்னர் அந்தத் திட்டங்களைப் படித்துப் பார்த்துவிட்டு, அதன்படியே கைதிகளுக்கு வசதிகள் செய்து தருவதாக வாக்களித்தார். சங்கத்தார் அடைந்த வெற்றியைக் கண்ட நாட்டார் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்கள்.

1818ஆம் ஆண்டு, சர்க்கார், கைதிகளின் நிலைமையைப் பரிசோதிக்க ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அதிலே எலிஜபெத்திற்கும் இடமளித்தார்கள் அந்தக் குழுவினருக்குச் சிறைச்சாலையின் நிலைமையைத் தெளிவாக எடுத்துக்கூறி, விளக்கினாள் எலிஜபெத். குழுவினர் அனைவரும் அவளது கருத்தை முழு மனதுடன் ஆமோதித்தனர். பிறகு குழுவினர், சர்க்காருக்குச் சிறையில் சீர்திருத்தம் செய்வதற்கு வேண்டிய வழிகளை எடுத்துக் கூறினர். சர்க்காரும், குழுவினர் கூறிய யோசனையின்படியே சிறையிலே சில சீர்திருத்தங்களைச் செய்தார்கள்.

அப்பொழுதுதான் முதன்முறையாக ஆங்கில நாட்டிலே, பெண்கள் சிறைச்சாலையிலிருந்த ஆண் காவலாளிகளை நீக்கிவிட்டு, பெண் காவலாளிகளை வேலைக்கமர்த்தினார்கள்!

புகழ் வேண்டும், உழைக்கும் உழைப்பிற்கு உடனுடனே பலன்

(9ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

தில்லை. முதலாளித்துவத்தின் வேலை தீர்ந்த பின்னரும், அதனை மாற்றி அமைக்காது, அதனைக் காப்பாற்ற எடுத்துக் கொள்ளப்படும் ஆரம்ப முயற்சி, பாசீச நோயின் துவக்கத்தைக் குறிக்கும். அதன் பின்னர் செய்யப்படும் கடுமையான செயல்கள் நோயின் வளர்ச்சியைக் காட்டும். இந்தக் கட்டத்தைத்தான் இன்று அமெரிக்கா அடைந்துள்ளது. இருந்தாலும் கிரேடி துரை, முதலாளித்துவத்திற்கும், கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்திற்கும் இடையில் ஓர் இன்பப் பாதை அமைத்திருப்பதாகவும், அந்தப் பாதை வழியே வாருங்கள் எனவும் அழைப்பு அனுப்புகிறார்.

ஜனநாயகமே அமெரிக்காவின் தலை சிறந்த கொள்கை என ஜம்பம் பேசிக்கொள்ளும் கிரேடியின் நாட்டில், சென்ற ஓராண்டாக நடந்து வரும் நிகழ்ச்சிகள், ஜனநாயகத்தைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளா அல்லது முதலாளித்துவத்தைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட பாசீச நடவடிக்கைகளா என்பதைப் பார்ப்போம்.

* சிந்தனையைச் சித்திரவதை செய்தல்.
* பேச்சுரிமையைப் பறித்தல்.
* தொழிலாளர் உரிமைகளைச் சட்டமூலம் ஒடுக்குதல்.

மக்கள் ஆட்சி முறையின் அடிப்படைகளைத் தகர்த்தெறிவதில், ஹிட்லர் எடுத்துக்கொண்ட அதே நடவடிக்கைகளை மிஞ்சிவிடக் கூடிய முறையில் அமெரிக்கா நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியான ஈன்ஸ்டீனையும், ஆஸ்ட்ரியாவிலிருந்த பெரேட் என்ற பேரறிஞரையும் ஹிட்லர் ஜெர்மனியை விட்டு வெளியேற்றினானல்லவா, அதேபோன்று பிரபல சினிமா நடிகரான சார்லி சாப்ளினையும் வெளியேற்ற வேண்டுமென்று அங்கு கிளர்ச்சி செய்யப்பட்டது. எட்வார்ட் ஜி ராபின்சன் என்ற நடிகரையும், ட்ரூதி பார்க்கர் என்ற கதா ஆசிரியரையும் ஒழித்துக் கட்ட முயற்சிக்கப்பட்டது. தலைவர் ரூஸ்வெல்டின் கீழ் துணைத் தலைவராக இருந்த ஹென்றி வேலஸ், வாஷிங்டன் நகர மண்டபம் ஒன்றில் பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இவர் பொறுப்பற்ற வெறும் அரசியல் கிளர்ச்சிக்காரரல்ல. அமெரிக்க ஆட்சியாளர்களின் போக்கு, ஆபத்தை உண்டாக்குவதாக இருக்கிறது என்பதை மக்களுக்கு விளக்கவே வேலஸ் முயன்றார். இதுகூட அமெரிக்கப் பண்பாட்டிற்கு ஒத்த செயல் அல்லவெனத் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

சிடிஜன் டாம் பெய்ன் எனும் சரித்திர சம்மந்தமான நவீனத்தைப் பள்ளிக்கூட நூல் நிலையத்தில் இருக்கக்கூடாதென, நியூயார்க் நகர சபையார் அப்புறப்படுத்தி விட்டனர். ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பின்னர், ஜெர்மனியின் நூல் நிலயங்கள் பல தீக்கிரையாக்கப்படவில்லையா? சிந்தனையைச் சித்திரவதை செய்து, அறிவை அடிமையாக்கி, மக்களின் உரிமை உணர்ச்சியை ஒழித்துக் கட்டவே இத்தகைய முறைகளை மேற்கொள்கிறது. இவ்வளவும் கிரேடி கூறும் ஜனநாயக இன்பப் பாதையின் மைல் கற்கள் போலும்!

அங்குள்ள தொழிலாளர்கள் பலத்த கிளர்ச்சிகள் செய்து, பற்பல விதமான அடக்கு முறைகளை எல்லாம் சமாளித்து 1935-ல் சில ஆரம்ப உரிமைகளைப் பெற்றனர். செனேடர் வாக்னர் என்பவர் தொழிலாளர்களுக்குச் சாதகமானதோர் சட்டத்தை இயற்றினார். அந்த ஜீவாதார உரிமை சாசனம், அவர் பெயரினாலேயே வழங்கலாயிற்று. அதன்படி தொழிலாளர்கள் சங்கம் காணவும், குறைகளைப் போக்க வேலை நிறுத்தம் செய்யவும், கருங்காலிகள் முன்னர் மறியல் செய்யவும், தொழிலாளர் சங்கங்களிடம் முதலாளிகள் ஒப்பந்தஞ் செய்து கொள்ளவுமான உரிமைகள் பெற்றனர். இன்று இவையனைத்தும் புதியதோர் தொழிற் சட்டத்தால் பறிக்கப்பட்டு விட்டன. இந்தச் சட்டத்திற்கு டாப்ட் ஹார்ட்லி சட்டம் என்று பெயர். இப்புதிய சட்டத்தின்படி வேலை நிறுத்தம் செய்வது கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. தொழிற் சங்கங்களை உடைத்தெறிவதற்கான வசதிகளை முதலாளிகளுக்கு உண்டாக்குகிறது. அதாவது கருங்காலிகளை வேலைக்கு அமர்த்தவும், வேலை நிறுத்தம் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுக்கவுமான உரிமைகளை முதலாளிகளுக்கு அளிக்கிறது. மறியல் செய்யும் உரிமை பறிக்கப்பட்டு விட்டது. பெரிய தொழிற் சங்கங்களைச் சீர்குலைத்து, முதலாளிகளின் தொழிற் சங்கங்களை அமைக்க இந்தச் சட்டம் இடந் தருகிறது. இத்தகைய பாதகமான சட்டத்தைத் தலைவர் ட்ரூமென், தலைவருக்குள்ள அதிகாரத்தால் புறக்கணித்தும் சட்டமாக்கப்பட்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

இன்று தொழிற் சங்கத்தில் ஒன்றரைக்கோடிக்கு அதிகமான அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அங்கு தொழிலாளர்கள் இருகூறு பிரிவு பட்டிருந்த போதிலும், தங்களுக்குப் பாதகமான புதிய சட்டத்தை எதிர்ப்பதில் ஒருமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருசாராரும் ஒரே சங்கத்தின்கீழ் வரும் நாளே, அமெரிக்கமுதலாளித்துவ முறைக்கு வீழ்ச்சி ஏற்படும் நாளாகும்.

தொழிலாளர்கள் உரிமைகளைக் குலைப்பது ஒருபக்கம் இருக்க, வேலையற்றோர் தொகையும் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. உலகத்திற்கெல்லாம் கடன் கொடுத்து உதவவும், மற்றநாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தவும், பொதுவாக உலகத்தை முன்னேற்றப்பாதையில் நடத்திச்செல்லவும் ஆர்வத்தோடு இருப்பதாகக் கிரேடி துரை சொல்லுகிறாரே, அந்த அமெரிக்காவிலேதான் வேலையற்றவர்கள் தொகை ஆறு லட்சத்திற்கு வளர்ந்துள்ளனர். இவர் முறையால்தான் மற்ற நாட்டு மக்களின் வேலையற்ற நிலைமை மாற்றமுறுமாம்! என்னே விந்தை?

வியாபாரத்தைத்தவிர—அமெரிக்க முதலாளிகளுக்கு இலாபந்தேடித்தருவது தவிர—கிரேடி துரைக்கு வேறு கவலை கிடையாது. புதிய மார்க்கெட் கிடைக்கவில்லையானால் 1932ல் ஏற்பட்டதைவிட மிகமிகப் பெரிதான பொருளாதாரப்புயல், அமெரிக்காவில் ஏற்பட இருக்கிறது. புயல் அடித்தேதீரும். இந்தியாவில் கிரேடியின் முயற்சி வெற்றி பெற்றால், சில நாளைக்கு அந்தப்புயல் தங்கள் நாட்டை நெருங்காமல் பார்த்துக் துக்கொள்ளஉதவும். முடிவில் புயல். அடிக்கும். முதலாளித்துவம் சாயும். சமதர்மம் பூக்கும். மக்கள் மகிழ்வர். மக்கள் ஆட்சி மலர்ந்துமணம்வீசும்

✻

# திராவிட நாடு

காஞ்சி] 7—9—47 [ஞாயிறு

## ஆதரிக்கவேண்டும்; :: ஆனல்?

★

பாஞ்சாலத்தில் பகைமை முற்றி விட்டது. சிறுபான்மையினர் வெளியேற வேண்டிய அளவிற்கு விரோத மனேபாவம் வளர்ந்துபோய் வைரம் பெற்றிருக்கிறது. பொதுப் பிரார்த்தனையாலோ, இராமதுன் மந்திரத்தாலோ இதனை மாற்றுதல் இனி முடியாது எனும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பொருட்களைச் சூறையாடல், தீயிடுதல், கற்பழித்தல், கொலை செய்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல், புகை வண்டிகளை வழி மறித்துப் பிரயாணிகளைத் தாக்குதல் முதலிய மிருகச் செயல்களில் அங்குள்ளோரில் பலர் ஈடுபட்டுள்ளனர். இரு பாஞ்சாலத்திலும், பழிக்குப் பழி வாங்கும் பண்புள்ள இரத்த வெறி கொண்டலையும் தூர்த்தர்கள் இரு வகுப்பிலும் மலிந்து கிடக்கின்றனர். இந்த விஷமிகளின் வெறியாட்டத்திற்குப் பலியாகி நிரபராதிகள், நிர்க்கதியாய்வேலைபற்றுக்,குந்த குடிசையுமிழந்து, குடிக்கக் கூழுமின்றி, உற்றார் உறவினரைப் பலி கொடுத்துவிட்டுப்,பரிதவித்துப்பாதுகாப்புத்தேடி சொல்லிற்கடங்காத் துன்பத்தில் மூழ்கியுள்ளனர். அவர்களில் பத்தாயிரம் அகதிகளைச் சென்னையில் வைத்து ஆதரிப்பதாக மாகாணப் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார். இதனை, மனிதாபிமானம் உடைய எவரும் தவறானது எனக் கூறத் துணியார். அகதிகளுக்குக் கோயில்களிலும், சத்திரங்களிலும், இராணுவ முகாம்களிலும் சுலபமாக இடவசதி செய்து தரலாம் எனவும் பிரதமர் நம்புகிறார். இதுவும் எளிதில் நிறைவேற்றக் கூடியதே.

வேளாண்மை, தமிழர்களின் பரம்பரைப் பண்பு. அப்பண்பிற்குக் கரை ஏற்படாது ஓமாந்தூரார் மேற்கொண்ட முயற்சி வரவேற்கத் தகுந்ததே. இத்துடன் மட்டும் அவர் கடமை தீர்ந்துவிடவில்லை. நமது மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் உணவுப் பஞ்சத்தை மனதிற் கொண்டுதான், இக்காரியத்தில் ஓமந்தூரார் ஈடுபட்டிருப்பார் என்று நம்புகிறோம். ஆகலால் அதிக காலத்திற்கு அகதிகளை வைத்து ஆதரிக்கவோ, மேலும் பல அகதிகளை ஏற்றுக்கொள்ளவோ, நமது மாகாண உணவு நிலை இடமளிக்காது என்பதையும் அவர் அறிவார். ஆள் ஒன்றுக்கு இங்கு எட்டு அவுன்ஸ் பங்கீடாக இருந்தும், மத்திய மாகாணத்திலும், பம்பாயிலும், ஐக்கிய மாகாணத்திலும் பதினாறு அவுன்சுக்கு அதிகமாக இருப்பதை அவர் கருத்தில் கொள்ளவேண்டும். நமது பங்கீட்டு அளவுக்கு ஏற்ப அங்கும் குறைப்பதின் மூலம், லட்சக் கணக்கில் பாஞ்சால அகதிகளை அங்குவைத்து எந்தவித சங்கடமுமின்றி, நிலைமை சீர்படும் வரையில், எவ்வளவு காலமானாலும் காப்பாற்றலாம்.

மேலும், அவர்களுக்கு வேலை தேடித் தருவதும் இங்கு சுலபத்தில் நடக்கக்கூடியகாரியமன்று. தொழிற்சாலைகள் மிகுந்த பம்பாய் மாகாணத்தில், அவர்கள் நிரந்தரக் குடிகளாக இருப்பதானாலும், தொழில் வசதிக்குக் குறைவில்லை.

தமிழ் நாட்டில், இந்து—முஸ்லீம் என்ற பிளவோ பகைமையோ இல்லாமல் நல்ல கட்டுப்பாடு முறை நிலவியிருப்பதற்குரிய முறையில் இங்குள்ளவர்களின் பண்பு அமைந்திருப்பது நாடறிந்த விஷயம். பாஞ்சாலத்தில் தங்களுக்கு நேர்ந்த தொல்லைகளை மிகைப்படுத்தி இங்குள்ள மக்களிடம் அகதிகள் கூறுவர். அகதிகளாக முன்வந்து கூறவில்லையானாலும், எரிவுள்ளம் கொண்ட சில பேனா வீரர்கள் வலியச் சென்று, அகதிகளின் வாயைப் பிடுங்கி, அவர்கள் கூற்றுக்குக் கண் மூக்கு வைத்துக் கயிறு திரித்து, வகுப்புக் கலவரத் தீக்கு வித்திடுவர். இதிலும் ஓமந்தூரார் முன்னெச்சரிக்கையான நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்றே நம்புகிறோம்.

வருகிற அகதிகளின் தராதரம் தெரியவில்லையென்று ஒரு செய்தியும், வருகிறவர்களில் பிரபல வியாபாரிகளும் இருப்பதாகவும், அவர்களுக்குக் குடியிருக்க வசதியான இடமும், தொழில் செய்வதற்குத் தகுதியான இடமும் தேவைப்படுமென மற்றோர் செய்தியும் தினசரிப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. சென்னையில் சௌகார்பேட்டை ஒன்று இருப்பதே தமிழர்களுக்கு வேதனை தரும் விஷயமாக இருக்கிற பொழுது, மற்றுமொரு பாஞ்சாலப் பேட்டையும் சென்னை நகரில் ஸ்தாபனம் ஆவதற்கு ஓமாந்தூரார் சம்மதிப்பார் என்று நாம் நம்பவில்லை. மேலும், குடியிருப்பு நெருக்கடியை இது அதிகமாக்கும் என்பதையும் மனதிலிருத்த வேண்டும். இந்த அபாயம் ஏற்படாமல் இருக்கப் பிரதமர் தகுதியான முன்னேற்பாடு செய்யக்கேட்டுக்கொள்ளுகிறோம். அகதிகளுக்குஆதரவு காட்டுவதோடு நமது கருணைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அகதிகள் ரூபத்திலே வரும் ஆதிக்காரர்களுக்கு அறவே அனுதாபம் காட்டுதல் கூடாது.

பலகாலமாகவே, தென்னாடு, வடநாட்டு வியாபார ஆதிக்கத்தால் சின்னா பின்னப்பட்டுச் சீரழிந்து கிடக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில், அகதிகளாகப் புகலிடம் தேடி வருகின்றவர்கள், நம்மை ஆட்டிப் படைத்துப் பொருளாதாரத் துறையில் அவதி தருபவர்களாக மாறும் நிலைமையை, முதலமைச்சர், இந்த நல்ல காரியம் செய்வதன் வாயிலாக உண்டாக்குவதற்கு வழிகோலக் கூடாது என்பதையும் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, பாஞ்சால அகதிகளுக்கு, அவர்களுடைய சொந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரம் நீங்கி, நிலைமை செம்மைப்பட்டவுடன், மீண்டும் அவர்களை அவர்களுடைய ஊருக்கு அனுப்புவதிலும்—முதலமைச்சர் தம்முடைய கடமையை இப்போதுபோலவே அப்பொழுதும் செய்வார் என்றும் எதிர்பார்க்கிறோம்.

✲

## சீர்திருத்தத் திருமணம்

——

22—8—47 வெள்ளிக்கிழமை காலை சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை K. பெருமாளுக்கும், கோவிந்தம்மாளுக்கும், ஷையார் சகோதரி சாரதாம்பாளுக்கும், கன்னியப்பனுக்கும், சரவண முதலி தெருவு 7-ம் நெம்பர் இல்லத்தில், தோழர் A. C. பாலசுந்திர நாய்க்கர், B. A. L. T. அவர்கள் திருமணம் நடத்திவைத்தார்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

கைமேல் வேண்டும், பிறரை வீழ்த்தி யாகிலும் தன் பெயரைப் பிரபல்யப் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற திட்டங்களுடன் வேலை செய்யும், நாட்டிற்குழைப்பதாக நடித்துக் கொண்டு நாடுமுழுவதும் சுற்றித்திரியும்போலித் தொண்டர்களைப்பார்க்கிறோம். அவர்களது எண்ணமெல்லாம் ஏழைகளுக்கும், தன்னாட்டிற்கும் நன்மை செய்யவேண்டுமென்ற முறையிலே யிருப்பதற்குப் பதிலாக, ஆட்டிப் படைக்கும் ஆசைக்கு அடிமையாகி, உண்மைத் தொண்டாற்றும் உழைப்பாளிகளைப் பற்றித் தூற்றித் திரிவதையும், தில்லுமல்லுச் செயல்கள் செய்வதிலும் காலத்தைக் கழிப்பார்கள். இப்படிப்பட்ட மட்டரகங்களைச் சேர்ந்தவள் அல்ல எலிஜபெத்!

அந்தக் காலத்திலே லண்டனிலே பிச்சைக்காரர்கள் மிக அதிகம். தெருக்களில் அவர்களின் கூட்டந்தான் அதிகமாக இருக்கும். ஒரு நாள் எலிஜபெத் லண்டன் தெரு வழியாக நடந்து சென்றபொழுது, ஒரு காட்சியைக் கண்டாள். ஒரு பிணம், அதனைச் சுற்றிலும் ஒரு சிறிய கூட்டம்! "ஏன் இந்தப் பிணம் தெருவிலே கிடக்கிறது? இவனுக்குச் சொந்தக்காரர்கள் கிடையாதா? எப்படி இறந்தான் இவன்?" என அருகிலிருந்தவர்களைக் கேட்டாள் எலிஜபெத்.

"இவனொரு பிச்சைக்காரன். இவனுக்குச் சுற்றத்தார்கள் இல்லைப் போலிருக்கிறது. இவனிடம் ஈவு இரக்கம் காட்டுவாரில்லை! பட்டினி, பட்டினியென்று கத்திக்கொண்டிருந்தான். மயக்கமாய் விழுந்தான், பிணமானான்!" என்றனர் அங்கிருந்தோர்.

பிணத்தைக் கண்டதும் அவள் மயிர் சிலிர்த்தது. அந்தச் சோக வரலாறு, பெரும் மன அதிர்ச்சியை அவளுக்கு உண்டாக்கியது. அந்தக் கோரக் காட்சி அவளது உள்ளத்தை வாட்டியது.

"துடிப்பான பருவம் ஆனால் பசியினால் துடி துடித்து இறந்தான்! ஐயோ! வறுமையும் வாட்டமும் தன் மானம் மிக்க மனிதர்களையும் பிச்சைக்காரர்களாக மாற்றுகின்றன! இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும்!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

பிச்சைக்காரர்களுக்கும் இனித் தொண்டாற்ற வேண்டும், அவர்களுக்கும் தன்னால் முடிந்த அளவு உதவி செய்ய வேண்டுமென்று அன்றுமுதல் தீர்மானித்தாள். தன் தோழர்களிடமும், அதிகாரிகளிடமும் அது சம்பந்தமாகப் பேசினாள். பணக்காரர்களை அணுகி ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கப் பணம் தரும்படி வேண்டினாள். செல்வமிக்க அவளது வார்த்தைகளுக்குச் செல்வர்களும் செவி சாய்த்து உதவியளித்தார்கள். விரைவிலே பிச்சைக்காரர்களுக்காக ஒருநிதியைத் திரட்டினாள். விறு விறுப்பாக வேலை செய்து, வீதியையே வீடாக நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கென ஒரு தனி விடுதியை ஏற்படுத்தினாள்.

அந்த விடுதியிலே ஆதரவற்றவர் தங்கி உணவருந்திச் சௌக்கியமாயிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன! அவர்களிலே வேலை செய்ய உடலில் உரமிருந்தவர்களுக்கு வேலை தேடித் தந்தாள். இப்படியாகத் திக்கற்றுத் தெருவில் அலைந்தவர்களுக்கும் பெருந்தொண்டாற்றினாள் அந்தப் பெண்மணி!

அந்தக் காலத்திலே ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஒரு இடத்திற்கு, நாடு கடத்தப்பட்ட கைதிகளை அனுப்புவது வழக்கம். சிறிய தவறு செய்தாலும் நாடு கடத்தும் தண்டனை சர்வ சாதாரணமாயிருந்த காலமது. அப்படித் தண்டனை பெற்ற கைதிகளை ஏற்றிச் செல்வதற்காக, தேம்ஸ் நதியில் கப்பல் தயாராக இருக்கும். கைதிகள் கப்பலிலே பல நாட்கள் உணவின்றிக் கஷ்டப்படுவார்கள். கப்பல் ஆஸ்ட்ரேலியா போய்ச் சேர்வதற்குள், பலர் உடல்களிலிருந்து உயிர் பிரிந்துவிடும்! அந்த அநியாயத்தைக் கண்டு எலிஜபெத்தின் உளமதிர்ந்தது. அதிகாரிகளுக்கு அது சம்மந்தமாக வேண்டுகோள் விடுத்தாள். சர்க்காரும் அந்தக் கொடிய பழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து வரலானார்கள்.

முதன் முறையாகச் சிறையினுள் புகுந்து, அங்கு சீர்திருத்தம் செய்த பெண்மணி அவள்தான். தன்கொள்கைகளையும், ஏழை எளியவர்களை உயர்த்தும் திட்டங்களையும் வெளி உலகமும் அறிதல் வேண்டுமென்ற ஆசையினால் பிரான்ஸ், டென்மார்க், முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தாள். அந்தந்த நாட்டு மக்களுக்கும் அதிகாரிகளுக்கும், கைதிகளையும் பிச்சைக்காரர்களையும் நடத்தும் முறை, மனித தர்மத்திற்கு ஏற்றதல்ல என்ற உண்மையை எடுத்துக்கூறி அவர்களது உள்ளங்களை மாற்றினாள். நெஞ்சில் உரமும், செயலில் திறமும் மிக்க அவளை அன்னிய நாட்டாரும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

எலிஜபெத்திற்குத் தனிப்பட்ட முறையில் தொல்லைகள் அதிகம். குடும்பத்தில் வேதனை தரும் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டேயிருந்தன. அடிக்கடி அவளுக்கு ஜுரம், தன் ஆசைப் பெண் குழந்தை இறந்ததால் துக்கம் ஆகிய அவ்வளவு சோகச் சூழ்நிலையிலும் மன உறுதியுடன் மக்களுக்காக உழைத்து வந்தாள்!

தனிப்பட்ட முறையில் தொல்லைகள் பல இருந்தபோதிலும் தன்னால் தரணிக்குச் செய்யவேண்டிய தொண்டினைத் தவறாமலும் வெறுப்பு, தளர்ச்சியுமடையாமலும், செய்துகொண்டிருந்தாள்.

பெற்ற நாட்டிற்காக உழைக்கப் பெண்களும் முன்வருதல் வேண்டும்; பெண்களாலும் அரிய பெரிய செயல்களைச் செய்து காட்ட முடியும்; அவர்களாலும் ஊழல்கள் நிறைந்த சமுதாயத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த முடியும் என்ற உண்மையை எலிஜபெத் உலகிலே நிலை நாட்டினாள்.

கைதிகளையும், கதியற்றோரையும் காப்பாற்றித்தீர வேண்டுமென்ற விரதம் பூண்டு அல்லும் பகலும், திறமையோடும் திடமனத்தோடும் உழைத்துக் கொண்டும், இடையிடையே ஏற்படும் இன்னல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டும் தொண்டாற்றிவந்த, ஏழைகளின் அன்னை, பெண் குலத்தின் மாணிக்கம், 1845ஆம் ஆண்டு ஆவி நீத்தாள்.

உயிர் விட்டாள், உலகிற்குழைத்த உத்தமியென்றதும் தன்னாட்டாரும் பிற நாட்டாரும் கண்ணீர் விட்டுக், கவலையில் ஆழ்ந்தனர்! இந்நிலவை பொழிந்த எலிஜபெத்தின் புகழ் புவியெலாம் பரவுவதாக!

*

# சண்முக விஜயம்

[இரா. செழியன்]

பண்டார வேஷத்தில் அவனை யாரும் சந்தேகிக்கவில்லை. "பஞ்சத்திற்கல்ல, பரம்பரையாகவே ஆண்டிதான்" என்று அவனை ஊர்மக்கள் நம்பினார்கள். ஊரைச்சுற்றி வரும் பொழுது, ஏதோ ஆண்டி அலைகிறான் என்று இருந்துவிட்டனர். தோட்டத்துக் கதவுகளை அவன் பார்வையிட்டபொழுதும், பாதுகாப்பற்ற சிறு வீடுகளை வெறித்து பார்த்த பொழுதும் ஆண்டியை எவரும் அதட்டிக் காரணம் கேட்கவில்லை. பரதேசியின் அர்த்தமற்ற பார்வை என்று நினைத்தனர், வேலையற்றவன் என்று அலட்சியப்படுத்தினர். அவர்களுக்குத் தெரியுமா பராசாதுவைப் போலநடிப்பவனுடைய உண்மை வேலை, பொழுது சாய்ந்ததும் தான் ஆரம்பமாகும் என்று.

நன்றாக இருட்டியதும், பண்டாரம் கையிலிருந்த கனத்தண்டியை முடுக்கினான். கன்னக்கோல வந்தது. கமண்டலத்தைக் கவிழ்த்தான், கனமான சாவிக்கொத்துக் கீழே விழுந்தது. புறப்பட்டான் தான் குறிவைத்த வீட்டுக்கு. வாயிற்படியை மிதிக்காமல், வழக்கம்போல் தானாக அமைத்த பிரத்தியேக வழிமூலம் வீட்டிற்குள் நுழைந்து சாமான்களைத் துழவினான். அவன் எதிர்பார்த்ததைவிடச்சற்று அதிகமாகவே இருந்தது. அது கோடீசுவரனுடைய வீடு அல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஏனென்றால் கோடீசுவரனுடைய வீட்டில் நுழைய முடியவில்லை. பண்டாரம் புகுந்த வீட்டிலுள்ளவன், ஏதோ வாயையும் கையையும் கட்டி வயிறுவளர்ப்பவன். வந்த வேலையைச் சீக்கிரத்தில் முடித்தான் சாது. ஓட்டைச் செப்புக்குடத்திலிருந்த தங்க நகையையும் உண்டியிலில் சேர்த்துவைத்த பணத்தையும் எடுத்துக்கொண்டு, வந்தவழியே திரும்பும் பொழுது காலிடறி ஒரு கல் கீழே விழுந்தது. "திருடன்" என்று கூக்குரல். ஒரு பாய்ச்சலில் பண்டாரம் பக்கத்துச்சந்தில்புகுந்து ஓடினான். பொருளைப் பறிகொடுத்தவன் சும்மா இருக்கிறானா? ஊரைக் கூட்டி அவன்பின் ஓடிவருகிறான். தப்பித்துக் கொள்ளவேண்டும், களவாடிய பொருளையும் தப்பவிடக் கூடாது. திடீரென்று, எதிர்ப்பட்ட கோட்டத்திற்குள் சாமான்களை வீசியெறிந்து, சுவரைத்தாண்டித் திருடனும் தோட்டத்திற்குள் பதுங்கிவிட்டான். பின் தொடர்ந்தவர்களுக்குத் திருடன் சென்ற திக்குத்தெரியாமல் நாலா பக்கங்களிலும் தேடித்திரிந்தனர்.

பெருமூச்சு நின்றதும், களவுச் சாமான்களைச் சுருட்டிக் கொண்டு கதவைத் திறந்து வீதிக்குள் அடியெடுத்து வைத்தான். அவன் காலடியில் ஒரு நிழல் ஊசலாடியது. ஏறிட்டுப்பார்த்தான். ஐயோ! போலிஸ்காரன் எலிகளுக்குப் பயந்து மறு பக்கம் திரும்பினால் புலிவந்து விட்டது.

"யாரடா அது?" உரத்தகுரலாயிருந்த போதிலும் அதில் கடுமையில்லை. கள்வனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது.

"நான் தானுங்க."

"ஜாமப்பூஜையா.நடமாட்டத்தைப் பார்த்தாலே தெரிகிறதே!"

"ஒண்ணுமில்லை எசமான். உலாவ வந்தேன். அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது இப்போது."

"சீ! அதென்ன பேச்சு;நான் பட்சபாதமில்லாதவன்," திருடனுக்குச் சுருக்கென்றது.

"திருடன், திருடனல்லாதவன் என்று இருக்கிறதா என்ன? சே! கிடையாது எனக்கு அதில் நம்பிக்கையும் கிடையாது."

திருடனுக்கு போனஉயிர்,திரும்பி வந்தது.

"உங்களைப்போல ஆயிரத்திலொருவர் தான் எங்கள் அருமையும், கஷ்டமும் தெரிந்தவர்கள். ஆனால் ஏட்டையா இருக்கிறாரே, அவர் போட்ட சத்தத்தை நினைத்தாலே பயமாயிருக்கிறது."

"அதெல்லாம் பயப்பட வேண்டாம். போலிஸ்வேலை என்றால் மிரட்டுவதற்கல்ல. எல்லோருக்கும் பாதுகாப்பளிப்பதற்கே. ஆபத்து என்ற பீதி அர்த்தமற்றது. சரிபோ, நாழியாகிவிட்டது. உடம்பை அலட்டிக்கொள்ளாதே, படுத்துத்தூங்கு."

"கோடி கும்பிடு சாமி"

கையுங் களவுமாகப் பிடிபட்ட கள்வனைக்,காவல்சுற்றிவந்தபோலிஸ்காரன் என்ன செய்வான் என்று நாம் நினைக்கிறோம். முதுகிலே இரண்டு வைத்து இழுத்துச்செல்வான். கையில் விலங்கு, தப்புப்பேசினால் முதுகில் சவுக்கடி, கொட்டடியில் இரண்டுவருஷம். வேறு வழியில்லை. திருடனுக்கும் இந்த மரியாதைகள் தெரியாது என்பதல்ல.

தனக்குக் கிடைக்கும் தண்டனையைத் தெரிந்துதான் திருடவருகிறான். வேறு வழியில்லாமல் வருபவன் தண்டனைக்குத் தயாராகிறான், ஆனால் செய்வதைச் செய்துவிட்டுத் திருடன் தப்பித்துக்கொள்ளலாம் என்றதைரியத்துடன் வருகிறான்.

ஆனால் மேலே குறிப்பிட்ட வண்ணம் தண்டனை கொடுக்க வேண்டிய சமயத்தில் ஆதரவு தரும் வகையில் தாணக்காரன், பேசுகிறான் என்று கேள்விப்பட்டால் எவருக்கும் ஆச்சரியத்தை கொடுக்கும். அதைப்போலச் சென்னையில் இந்திய நிதி மந்திரி சண்முகம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு ஆச்சரியத்தை மட்டுமல்ல, திகைப்பையும் உண்டாக்கியிருக்கிறது.

புதிய இந்தியசர்க்கார் அமைக்கப் பட்ட நேரத்தில் நிர்வாகப்பொறுப்பேற்க அழைக்கப் பட்டவர்களில் சர்.சண்முகமும் ஒருவர். அரசியல்சந்தடியிலிருந்து ஓய்வுஎடுத்துக்கொண்டவர்போல, காலையில் மார்க்கட் புள்ளி விவரத்தையும், மாலையில் காவியரசனையைப் பற்றியும், இகபரலாபத்துடன் ஆராய்ந்துகொண்டிருந்தவருக்கு அரசியல் ஓய்வு தருவதாயில்லை. அழைப்பு வந்ததும் சர் பட்டம் பெற்றவர் டில்லிக்குப் பறந்தார், பார்த்தார், பதவியேற்றார் சர் சண்முகம் நிதி மந்திரிசண்முகமாகத் திரும்பினார். போனவர் திரும்பி வந்தார் பூரணத்துடன்.

சென்னைக்குத் திரும்பியதும், செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில்அவருக்களித்த வரவேற்பில் கனம் சண்முகம்பேசியிருக்கிறார். ஓய்வுவேளைச் சொற்பொழிவென்றோ, பொருளாதாரச் சூழ்நிலையைப்பற்றிய வெறும் விளக்க உரையென்றோ யாரும் அவரது பேச்சை ஒதுக்கிவிடமுடியாது. முன்னாள் சர். சண்முகம் பேசியிருந்தால்கூட, பேச்சில் காணப்படும் சாரத்தைப்பற்றிநீவாதிக்கமுடியுமே யன்றி; நாட்டின்பொருளாதாரத்தை

நிர்ணயிக்கும் பொறுப்பு அவருக்கு இருந்தது என்று கூறமுடியாது. இன்றோ விடுதலை இந்தியாவின் மந்திரி சபையில் அங்கம் வகிப்பவர். அதிலும் பொறுப்பு மிகுந்த நிதி மந்திரி. வெள்ளையன் வெளியேறியதும், நாட்டுக்கு விமோசனம் பிறந்துவிட்டது என்று மக்களனைவரும் நம்பிக்கையுடனிருக்கும் நேரத்தில் நிதி மந்திரி பேசுகிறார்.

வர்த்தகக் குழுவினருக்குள் ஒற்றுமைநிலவவேண்டும் என்ற வழக்கமான உபதேசத்துடன் அவரது பேச்சு ஆரம்பமாகிறது. "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு" என்ற உணர்ச்சியூட்டும் பாரதி வாசகத்தைப்படித்திருக்கிறோம். ஒன்றாயிருந்தால்தான் நன்றாயிருக்கலாம் என நாட்டுப்புறத்தில் திரியும் நாடோடி கூடக் கூறுகிறான். இடுப்பொடிந்த ஏழையும், உழைத்தலுத்த ஆலைத் தொழிலாளியும், வயலோரத்தில் வாடும் உழவனும் உபயோகிக்கும் "ஒற்றுமை" என்ற சொல்லுக்கு அர்த்தம் ஒன்றுதான் ஆனால் நிதி மந்திரி சண்முகம், அவர்களைப் போலச் சாமான்யரா? சே! புழுவுக்கும், பொன்வண்டுக்குமுள்ள வித்தியாசம். அவரோ கொங்குநாட்டுச் செல்வர். கோவைக்குரிசில், ஆலை அதிபர், அரசியல்நிபுணர், முன்னாள்சபா, தற்பொழுதைய நிதி மந்திரி கனம் சண்முகத்தைக் கஞ்சிக்கில்லாத ஆறுமுகத்துடன் ஒப்பிட முடியாது. எனவேதான் சாமான்யர்கள் உபயோகிக்கிற 'ஒற்றுமை' என்ற சொல்லைக் கனம் சண்முகம் சொல்லும்பொழுது பொருள் வேறுபாடு காண்கிறது. "ஒற்றுமை என்று கூறும்பொழுது ஒரு மக்கள் கூட்டத்தின் உரிமைகளை ஆக்ரமிப்பு முறையில கூட்டு முயற்சியால் எடுத்தும் குறுகிய அர்த்தங்கொண்ட தொழிற்சங்க ஒற்றுமையல்ல" என்று குறிப்பிடுகிறார். அதாவது தொழிற்சங்கம் ஆக்ரமிப்பு வேலை செய்கிறது, அது குறுகிய நோக்கம் கொண்டது. இதை வெளிப்படுத்தத்தோழர் சண்முகம் கஷ்டப்பட்டிருக்கிறார்; இதுதான் முதல் தடவை, தொழிலாளர் "ஒற்றுமை" முதலாளி 'ஒற்றுமை' என்று இருவகை நமக்குக் கிடைத்துள்ளது. ஒற்றுமையென்றால் எங்கே தொழிலாளர் ஒன்றுகூடுவது, சங்கம் அமைப்பது, அதிகசம்பளம் கேட்கும் அருவருப்பான ஒற்றுமை என்று நினைத்து விடக்கூடாது என்பதற்காக அளந்து பேசியிருக்கிறார். கோவையிலிருந்ததால், ஆலைத் தொழிலாளர்கள் போட்ட ஒற்றுமை முழக்கம் அவருக்கு "தொழிலாளர் ஒற்றுமை"யிடத்தில் நீங்காத வெறுப்பையும், கோபத்தையும் உண்டாக்கியிருக்கலாம். அவ்வாறு 'ஒற்றுமை' என்ற சொல்லில் வேற்றுமை காணுமளவுக்கு அது வளர்ந்ததே நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

"வாணிபத்தில் ஈடுபட்டவர்கள் ஒன்றுகூடிச் சர்க்காரிடம் ஆக்ரமிப்பு முறையில முறையிடுவதோ, அன்றி ஆக்ரமிப்புச் செய்கையில் இறங்குவதோ கூடாது. சர்க்காருடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கூறுகிறார். புதியசர்க்கார் நாட்டிலுள்ள அனைவரின் ஆதரவையும் பெறவேண்டியது அவசியம். பொருளாதார முக்கியத்துவம் உடைய வாணிபத்தின் ஒத்துழைப்பைஆரம்பதிசையில் கேட்பதில்ஆச்சரியமில்லை. இயற்கையாக எடுத்துக்கொள்ள வேண்டியது, நிதிமந்திரியாரின்பேச்சு அதன் அவசியத்தை உணர்த்துவதாயிருந்தாலும், முதலாளி வர்க்கத்தினரின் ஆதரவைப்பெற, நிதிமந்திரி அளித்துள்ள உறுதிமொழி பாமரமக்களுக்குப் பயத்தை அளிப்பதாக இருக்கிறது.

"வர்த்தகம் செய்வோரின்உரிமைகளும், முதலாளி வர்க்கத்தினர் என்று அழைக்கப்படுவோரின் வசதிகளும் மிக ஆபத்தான நிலையிலிருப்பதாகவும்பணக்காரர்களைக்கொள்ளையடிக்க ஒவ்வொருவரும் தயாராகிவிட்டனர் என்றும், சமீபகாலத்தில பீதி வளர்ந்துள்ளது. இந்தத் தப்பிப்பிராயத்தை ஒழிக்க நான் விரும்புகிறேன். நான்சொலவது தனிப்பட்ட நபருடைய கருத்தல்ல, பிரதமருள்ளிட்ட என் மந்திரி நண்பர்களின் ஆதரவுடன் கூறுகிறேன். இன்றைய இந்திய அரசாங்கம் குறிப்பிட்டவர்க்கத்தினரைச் சார்ந்து நிற்பதல்ல, அது வர்க்க உணர்ச்சியுடைய அரசாங்கமல்ல, அது பொது மக்களுடைய அரசாங்கம்."

நிதிமந்திரியின் கருத்து வெளிப்படையாகஇருக்கிறது; நாங்கள் ஏழை என்றும் பணக்காரன் என்றும் பார்க்கப்போவதில்லை. அந்தவித்தியாசத்தை நாங்கள் ஏற்கவில்லை என்று கூறுகிறார்.

சுதந்திர சர்க்கார் வந்துவிட்டது. இனிச்சுகவாழ்வு திரும்பும் என்று நாட்டுமக்கள் நினைத்தனர். "சிறையிலே வாடினோம், குண்டடிபட்டோம் குடும்ப சுகத்தைஇழந்தோம், கடைசியில் மக்களின் தியாகத்தால்வெள்ளையன்வெளியேறினான்; இனிநாட்டுக்கு விமோசனமே" என்று தொண்டர்கள் மகிழும் நேரம். ஏகாதிபத்தியத்தின்ஸ்வேச்சாதிகாரஆட்சியால்இந்த உபகண்டத்தில் ஏழ்மை பொறுக்கமுடியாதஅளவுக்குவளர்ந்துவிட்டது. ஏகாதிபத்தியம் ஒழிந்துவிட்டதால் இனி வறுமை ஒழிந்து வளம் பெருகும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். நிதிமந்திரியின் பேச்சு, பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. அவரது பேச்சு நாட்டுமக்களின் நம்பிக்கையைச் சிதறடிப்பதாயிருக்கிறது. உணவுப்பஞ்சம், துணிப்பஞ்சம், வேலையில்லாத்திண்டாட்டம், கூலிக்குறைவுபோன்று நாட்டை நசுக்கிவரும் பொருளாதாரச் சீர்கேடுகளை மாற்றி, மக்களுக்கு நீதி வழங்கும் முறையில் நிதிமந்திரியின் பேச்சு இல்லை. கொள்ளை இலாபமடித்த ஆலை முதலாளிகளுக்கும், கள்ளமார்க்கெட்டில் கொழுத்த கழுகுக்கூட்டத்திற்கும் கனம் மந்திரியார் அபயம் அளிக்கிறார். முதலாளிகளை ஆதரிப்பதாயிருக்கிறது, அதுமட்டுமல்ல புதியசர்க்காரின் போக்கும்அப்படித்தான் இருக்கும் என்று பேசுகிறார்.

பணக்காரர்களைக் கொள்ளையடிக்கப்போவதாகப் 'பீதி' என்று கூறுகிறார். அவர் குறிப்பிடுவதுகள்ளமார்க்கெட் காதகர்களைப் பிடிக்கவேண்டும் என்று மக்களிடையே வளர்ந்துள்ள கொதிப்பை. அது அர்த்தமற்ற பயமல்ல, கள்ளமார்க்கெட்டுக்காரர்களின் தூக்கத்தைக்கெடுக்கும்பொது மக்களின் கூக்குரல். அதை உதாசீனப்படுத்தி, கள்ளமார்க்கெட்டுப் பணமூட்டைகளுக்குப் பக்கபலம் சேர்க்கிறார் கோவைச் செல்வர்—ஆலை அரசர் சண்முகம்.

கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் யார்? யுத்தப்பொருளாதார நெருக்கடியின்போது, பஞ்சத்தால் அடிபட்டமக்களின் பிணங்கள்வீதிகளில் நிறைந்தபொழுது, இரும்புப்பெட்டியில் பணத்தை நிரப்பிய கல்நெஞ்சினர். நாட்டிலே உணவு இருந்தது, ஆனால் மக்கள் பசியால் வாடினர்.

பஞ்சம் வந்தது, இருட்டறைகளில் உணவுப்பொருள்கள் அடங்கின, கள்ளமார்க்கெட்டு எழுந்தது.

பசி என்று ஓலம் — பணக்காரர்

கள் இலாபக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மக்கள் துடி துடித்தனர்— தராசு வேலை செய்யவில்லை.

சகிக்க முடியவில்லை—இன்று சண்முகம் பேசும்சமரச நோக்கம் அன்று வரவில்லை.

கூக்குரலிட்டனர் — பணம் சிரித்தது.

மக்கள் சோர்ந்தனர்-கள்ளமார்க்கெட் துரிதமாக வேலை செய்தது.

மக்கள் இறந்தனர். வீதியிலே பிணங்கள் — இருட்டறையில் நெற்களஞ்சியம் — இரும்புப்பெட்டியில் பணம்.

சாக்கடையோரத்தில் பிணங்கள் அழுகின—பாதாள அறையிலிருந்த உணவுப்பொருள்கள் அழுகின— கணக்கேட்டில் கள்ளமார்க்கெட்டு வரவு உயர்ந்தது.

பிணம்விழுந்தது,பணம்மிகுந்தது.

பிணம்—பணம், ஒன்றையொன்று சுற்று வளையத்தில் ஓடும்படி செய்தனர். அவ்வாறு ஒன்றையொன்று மோதவிட்டு லாபம் சம்பாதித்தவர்களே கள்ளமார்க்கட்காரர்கள்.

அத்தகைய கள்ளமார்க்கட்காரர்களுக்கு அபயமளிக்கிறார், கனம் சண்முகம். கள்ளமார்க்கட்காரர்களைக் கழுவில் ஏற்ற வேண்டுமென்ற நேருவின் பேச்சு, இன்று மறைக்கப்பட்டது நிதிமந்திரியின் உறுதிமொழியால். கள்ளமார்க்கட்காரர்களின் கொட்டத்தை அடக்கவேண்டும், திடீர் பணக்காரர்களின் கணக்குப்புத்தகங்களைப்பரிசோதனைசெய்ய வேண்டும், சட்டதிட்டங்களால்கள்ள மார்க்கட்டை ஒழிக்க வேண்டும் என்று காங்கிரசிலிருந்தும், வெளிக் கட்சியிலும் எழுந்துள்ள வேண்டுகோள்களும், கிளர்ச்சிகளும் அலட்சியப்படுத்தப்பட்டு விட்டன. கள்ளமார்க்கட்டால் ஏற்பட்டுள்ள பொருளாதார அநீதியை ஒழிக்க அரசாங்கம் முன் வராது என்று நிதிமந்திரியின் பேச்சால்தோன்றுகிறது. அதற்குமாறாகக் கொழுத்த பணக்காரர்களுக்குப் பாதுகாப்பாகச் சட்டம் இருக்கும் எனவும் உறுதி கூறுகிறார். கோவையிலிருந்து டில்லி சென்ற சண்முகம், கோவை கோடீஸ்வரர்களுக்கும், வடநாட்டுபிர்லாக்களுக்கும் இடையே சமாதானத் தூதுவராகக் காட்சியளிக்கிறார்.

அன்று நடந்த வரவேற்பில், ஹமீத்கான் அவர்கள் பின்னடைந்துள்ள சென்னைமாகாணப்பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலும், சென்னைமாகாணத்திலுள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்க மத்திய அரசாங்கத்தினிடம் வாதாடும்படியும் நிதிமந்திரியாரைக் கேட்டுக்கொண்டார். பட்டினிப் பட்டாளத்தைப் பற்றி நிதிநிபுணர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பணமூட்டைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார். கள்ளமார்க்கட் வியாபாரிகள் கலங்கிய நேரத்தில் "அஞ்சேல்" என அபயம் கொடுக்கிறார். நாட்டுமக்கள் கொதித்த உள்ளத்தினராயிருக்கின்றனர். நாலாபக்கத்திலிருந்தும் கண்டனக்குரல்கள் எழுந்தன. மக்கள் கேட்கின்றனர் எங்கே உணவு என்று கந்தலாடையினர் கேட்கின்றனர் கட்டிக்கொள்ளத் துணியைக் கொடு என்று. கூக்குரல்களையும், கோபப் பார்வைகளையும் பார்த்து நடுங்கிய நிலையிலிருக்கும் கள்ளமார்க்கட்டு முதலாளிகளுக்கு அபயம் தருகிறார் "நானிருக்கப் பயமேன்?" என்று.

களவுப் பொருள்களுடன் தன் முன் வந்த திருடனைப்பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்தாமல், திருடனுக்கு ஆதரவு தரும் வகையில் பேசுவது திருட்டுவேலையைத் தூண்டுவதாகும். நிதிமந்திரியின் பேச்சுப் பொருளாதார அநீதிகளைத் தூண்டுவதாயிருக்கிறது. நீதிமிகுந்தவரிடம் நீதி இருப்பதாகக் காணப்படுகிறது. அவரது பேச்சுப் பாமர மக்களின் பசியைப் போக்குவதாயில்லை, பஞ்சத்தை ஒழிப்பதாயில்லை. பணமூட்டைகளுக்குப் பக்கபலமாய், பஞ்சமும், பசியும் அதிகரிக்கும் பயங்கரப் பாதையில் நாட்டைச்செலுத்துவதாயிருக்கிறது.

✲

## கலைக் களஞ்சியம்

நாடு, நகரம், காடு, மலை, மொழி, தத்துவம், சமயம், விஞ்ஞானப் புதுமைகள், சென்றகால நிகழ்கால சிறந்தநிகழ்ச்சிகள், சகல துறைகளிலும் மக்களுக்குப் பணிபுரிந்த நல்லவர்களின் சிறுவரலாறு முதலியவைகளைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டுவது சிறப்பாகும். ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் அதற்கான நூற்கள், பலவடிவிலே வந்திருக்கின்றன. தமிழ்மொழி மட்டும் கற்றுள்ளவர்க்குப் பயன்படும் வகையில், தமிழில் அத்தகைய நூல்ஒன்று இன்றியமையாததாகும். அதற்கான முயற்சியில் முனைந்துள்ளார் கல்வி அமைச்சர் அவனுசிலிங்கனார். அவரது இந்த அரும்பணியைத் தமிழர்கள் வரவேற்பர் என்பது உறுதி. அப்பெரும் பணியின் துவக்கத்திற்கே முதல் ஒருலட்சம் தேவைப்படுமெனக்கூறுகிறார். அதற்கான வேண்டுகோள் ஒன்றும் தமிழர்க்கு விடுத்துள்ளார். தமிழர்கள் ஆதரவு காட்டுவர் என்பதிலும் சந்தேகமில்லை. சிறந்த முறையில் நூல் வெளிவருவதற்கு இது மட்டும்போதாது. வேறுவகையிலும் இதற்கான பொருள் திரட்ட முயற்சி எடுத்தல் வேண்டும்.

சைவ வைணவ மடங்களிலே, செல்வம் தேங்கிக்கிடப்பதை அனைவரும் அறிவர். அந்தச் செல்வமும் மக்களுக்கு நல்லமுறையில் பயன் படவேண்டுமென்பதில் கல்வி அமைச்சருக்கும் கருத்து வேறுபாடு இருக்காதென்றே கருதுகின்றோம். நம்நாட்டு மாடலயங்களில் முடங்கிக் கிடக்கும் பெரும் பொருள், 'கலைக்களஞ்சியம்' போன்ற பொதுநலப்பணிக்கு மட்டுமல்ல, இன்னும் நம் நாட்டுக்கின்றியமையாது தேவைபடுகின்ற பல சிறந்த காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டாலும்; அச்செல்வம் குறையாது. எனவே அமைச்சரவர்கள் எம்முடைய இந்த யோசனையையும் ஏற்றுத் தாம் மேற்கொண்ட பெரும் பணியை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும். மந்திரியாரின் வேண்டுகோள் மட்டும், அவர்களின் இருதயத்தைத் தொட்டுவிடாது. பொருள்நூல் கற்றும், சமயநிலை தெரிந்தும் உள்ள அமைச்சருக்கு, காவி உடைப் பிரபுக்களின் கையில் சிக்கியுள்ள செல்வம் சீரழிக்கப்படுவதின் பயனற்ற தன்மையை விவரிக்கத் தேவை இல்லை எனவும் கருதுகிறோம். எனவே, மந்திரியார் எனும்முறையில், அவர்களிடமிருந்து பொருள் பெறுவதற்குச் சகலஉபாயங்களையும் மேற்கொண்டு, சிறந்த முறையில் கலைக்களஞ்சியத்தை வெளிக்கொணருமாறு விழைகிறோம்.


## 'தோழன்'

மாதவெளியீடு, ஆசிரியர்:— A. P. ஜனார்த்தனம் M. A., ஆண்டுசந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4.

'தோழன்' ஆசிரியரைத் தமிழர் நன்கறிவர். டார்பிடோ எனும் அடைமொழியால் அழைக்கப்பெறும் அளவிற்கு, தமிழர்களின் அன்பைப் பெற்றுள்ளவர். கண்கவர் வனப்பும், கருத்தை ஈர்க்கும் கதை, கட்டுரைகளும் உடையதாக இருக்கிறது. தோழன் திராவிடர்களின் எதிர்கால வாழ்வைச்செம்மையாக்குவதையே சிறந்த பணியாகக் கொண்டிருக்கிறது. எனவே தோழனின் தொண்டைத் தமிழர்கள்நன்குவரவேற்று, அதற்கு ஆவன செய்யவேண்டுமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"தோழன்"
8. A பைகிராப்ட்ஸ் ரோட்
திருவல்லிக்கேணி, சென்னை.

4-ம் பக்கத் தொடர்ச்சி

இனி, மேருவைப் போல் இருந்தும் எடுக்கும்போது லகுவாய் இருப்பது என்பதைப் பொருளாக அடக்கிப் பேசப்படும் 'லகிமா' என்பதற்கும் மிகவும் லகுவாகப் பொருள்கூறிவிட்டார்கள். மேரு மலையைப் போன்று உயரமாகவும் அதன் சுற்றளவுக்கு ஏற்பவும் ஒருபொருளை உண்டாக்கினால், அதிலும் உலகிற் காணப்படும் பொருள்களில் மிகவும் லகுவான பொருளைக் கொண்டு உண்டாக்கினாலும் கூட, அதனை எடுப்பதென்பது லகுவாக முடியக்கூடிய காரியமன்று. 'லகிமா' என்பதற்குக் கூறப்பட்டிருக்கும் பொருள், நான் மேலே எடுத்துக் காட்டியதுபோல அதன் உயரத்தையும் சுற்றளவையும் மட்டும் குறிப்பிடாமல் அதன் கனத்தையும் அதாவது மேருமலையின் எடையையும் சேர்த்தே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேருமலையின் உயரம்—சுற்றளவு—கனம் ஆகிய அனைத்தும் உள்ளிட்ட ஒரு பொருளை உண்டாக்கி, அதனை எடுத்தால், அது, எடுப்பதற்கு அதாவது கையினால் தூக்கிப்பந்துபோல் வைத்திருப்பதற்கு லகுவாய் இருக்கும் என்பதே 'லகிமா' என்பதற்கு மதநூலாரால் கூறப்பட்டிருக்கும்பொருளில் அடங்கியுள்ள உண்மையாகும். எனவே, மேருமலையைப்போல், வடிவத்திலும் கனத்திலும் ஒருபொருளை உண்டாக்குவதென்பதே லகுவாக—ஏன், பெருமுயற்சி எடுத்தாலும் முடியக்கூடிய காரியமன்று. அப்படி ஒருபொருளை உண்டாக்க, ஐயகோ! எத்தனைக்கோடி மணங்கு இரும்பு வேண்டும்! அவ்வளவையும் ஒன்று சேர்க்க எத்தனைக்கோடி மக்களின் உழைப்பு வேண்டும்! அப்படி உழைப்பவர்களுக்கு எத்தனைக்கோடிபணம் கூலியாகக் கொடுக்கவேண்டும்! இவ்வளவுக்கும் மேலாக அத்தனைக் கோடி மணங்கு இரும்பு எங்கெங்கு இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்க எத்தனை நிலநூல் ஆராய்ச்சியாளர் வேண்டும்! இவ்வளவும் செய்து முடிந்தபின்னர், அதனை ஒருவர் எடுக்கக்கூடியதாக ஒரே வடிவமாக்கித்தர ஒரு கருமான் போதுமா? ஒரு கருமானே போதுமென்றால், மேருமலையைப்போன்ற ஒருவடிவத்தைஉருட்திரட்டி ஒன்றாக்க எத்தனைக்கோடி நாட்கள்பிடிக்கும்! இவ்வளவும் எப்படியோ—எவ்வளவோ முயற்சிஎடுத்துச்செய்துமுடிக்கப்படுகிறதென்றே வைத்துக்கொள்வோம். இப்படிச் செய்யப்பட்ட ஒருபொருளை ஒருவர் மிக லகுவாகப் பந்துபோல் எடுத்து விளையாடுவதாம். இந்த விளையாட்டு முடியுமா முடியாதா என்பதுஒருபுறம் இருக்கட்டும். ஏன்இந்தவிளையாட்டு? இதனால் உலகுக்கோ அல்லது உலகெலாம் உணர்ந்தோதற்கரிய அந்த உமைபங்கனுக்கோ அன்றி அந்தக்காரியத்தைச் செய்யும் சித்தருக்கோதான் என்ன நன்மை? எண்ணிப்பாருங்கள் அன்பர்களே!

இனிக், 'கரிமா' என்று சொல்லப்படும் ஒருசித்திக்கு, பரமாணுவைப் போல் இருந்தும் எடுக்கும்போது மேருவைப்போல் கனப்பது என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. மேருமலையைப்போல, கனமுடையது; ஆனால் வடிவத்தில் பரமாணுவைப் போல் சிறியது; அது என்ன பொருளோ! எப்படியிருக்குமோ! எதுகொண்டு செய்யப்பட்டதோ! என்று கேட்டு என்னைத்திக்குமுக்காடச்செய்துவிடாதீர்கள். அப்படி ஒருபொருள் இருப்பதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். அதற்குச்சாட்சியாகப், பெரியபுராணத்திற்கு அரும்பத விசேட ஆராய்ச்சிக்குறிப்புரையும் வசனமும் வரைந்த திரு. வி. கலியாணசுந்தரனார் இருக்கிறார். சேக்கிழார் இப்போதில்லை. எனவே சாட்சியைக்கூண்டிலேற்றிச் 'சாற்றுமின் இதற்குப்பொருள்' என்று அவரைச்சாடாமல், சமாதான முறையில் கேளுங்கள்.

இனி, எங்கும்போகும் ஆற்றலோடு எல்லாவளங்களையும் பெறுவதுஎன்ற விளக்கத்திற்கு இலக்காக நிற்கும் 'பிராத்தி' என்ற சொல்லுக்கு இன்றையஉலகம் மதநூலார் கருதுவது போன்ற அத்தனை மதிப்புத்தராதென்றே கருதுகிறேன். ஏனென்றால், இன்று பலர் அந்த வேலையை மிகவும் எளிதாகச் செய்துவருகின்றார்கள். நீருக்குள்ளேயே நெடுந் தொலைவு செல்வது; கடலையும் மலையையும் காற்றெனக்கடந்து செல்வது; நிலத்தைப்பிளந்து அல்லது குடைந்து நிலத்திற்குள்ளேயே புகைவண்டியோட்டுவதும், மின்விளக்குகளால் அந்த இடங்களை அழகுபடுத்துவதுமான காரியங்களை மூளைபலங்கொண்டு செய்வதுபோன்றவைகள், இன்று 'பிராத்தி'யைப் பிடித்துப்பிடரியில் தட்டிப், பின்னிறுத்தி முன்னேறிச்செல்கின்றநிலைமையைப் பெற்றுள்ளன.

இனி, ஓரிடத்தில் இருந்தபடியே எல்லாப்போகங்களையும் பெற்று நுகர்வது என்பதை உள்ளடக்கி நிற்கும் ''பிராகாமியம்'என்பதும்இன்று பலரால் கையாளப்பட்டே வருகின்றது. இன்றுமட்டுமென்ன! என்றுமே இச்'சிறந்த' இன்ப நுகர்ச்சியைச்சிலர் பெற்றுக்கொண்டே இருந்தனர்—இருக்கின்றனர். நம்நாட்டில் சிலர் இருக்கின்றனர்; அவர்கள் இத்தகைய இன்பங்களைப்பெற்று நுகரவேண்டுமென்று வாய் திறந்துகூடக் கேட்பதுகிடையாது. ஏதாவது ஒரு இன்பத்தைப்பெற்று நுகரவேண்டுமென்று எண்ணுவார்கள்; அவ்வளவுதான், உடனே அவர்களுடைய கண்கள் பேசும்; கண்பேசுமென்றால்பார்க்கும் என்றே பொருள். அந்தப்பார்வையின் கூர்மை, எப்போதும்எம்மீது விழுமென்றுபக்கத்தில்கைகட்டிவாய் பொத்திக் காத்துக்கொண்டு நிற்கும் பலரில்சிலர்மீது பாயும். அந்தப்பார்வையின் குறிப்பைஉணர்ந்தஅவர்கள், அந்தக்குறிப்பின்படியும் வழக்கமாகச் செய்து வருகின்ற தங்கள் பழக்கப்படியும், அவர்களால் விரும்பப்பட்ட இன்பப்பொருளை, இரவென்றும் பகலென்றும் வேறுபாடு கருதாதுஉடனே கொண்டுவந்து சேர்த்து விட்டு, அப்பொருளைச் சேர்த்துக்கொண்டவர்களால், அளிக்கப்படும்சிறு பொன்னையும், மறக்கமுடியாத புன்னகையையும் பெற்றுப்பெருமிதங் கொள்வர்.

இஃதிவ்வாறாக, நம்நாட்டிலேயே பெரும்பான்மை மக்கள், ஓரிடத்தில் தங்கி உயிர்வாழ முடியாமல், உணவுக்கும் உடைக்குமாக ஊர் ஊராய்ச் சுற்றித்திரியும் கோரக்காட்சிக்கு இலக்காகியும் உள்ளனர். இவர்கள் மிகப் பலர். மேலே கூறியபடி ஓரிடத்தில் இருந்தபடியே எல்லா இன்பங்களையும் பெற்று நுகர்பவர் ஒரு சிலரே. என்றாலும் இந்தஒருசிலரின் அளவுக்கு மிஞ்சிய இன்பவாழ்க்கையே மிகப்பலரின் துன்ப வாழ்க்கைக்குக்காரணமாய் உள்ளது என்பது மிகைபடக்கூறுவதாகாது. இந்தக்கொடுமையைக் களைந்தெறிந்து மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் சரிநிகர் சமமாக வாழ்வதற்குஇடங் கோலமுடியாமல் பெரியமுட்டுக்கட்டையாய் இருப்பவை புராண இதிகாசங்களேயாகும். புராண இதிகாசங்களில்தான், 'விதி,' 'தலையெழுத்து'

(2-ம் பக்கம் பார்க்க)

# வளமா? வறுமையா?

★

வந்திறங்கிவிட்டார். வாய்திறந்துவிட்டார். வேண்டியதெல்லாம் கொடுத்து உதவுவதாக வாக்களித்துவிட்டார். வறுமையைத் தலைகாட்டாமல், நாட்டைவிட்டே துரத்திவிடக் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார். நமது மக்களிடம் அவருக்குள்ள கருணையின் விளைவு, இது என்றும் கூறுகிறார். விஷயம் விளங்கிக்கொள்ளாமல் வீணர்கள் சிலர், அவர் போக்கைச் சந்தேகிக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார். அவர்களை நம்பாதீர்கள் என்று நல்வாக்குத்தருகிறார். எல்லைக்கப்புறம் இருந்து பிறந்த போதனை, அது, எனவும் விளக்கமுரைக்கிறார். வேதனை தரும் பாதை அது ஆகாதே, எனவும் அலறுகிறார்.

பிறர் உதவியின்றி நீங்கள் முன்னுக்கு வரலாம்; ஆனால் நாள் பல செல்லுமே என ஏங்குகிறார். தாம் மட்டுமல்ல, தம் தலைவரும் உதவி செய்ய ஆர்வங்கொண்டுள்ளார் என உறுதி கூறுகிறார். நாம் இருவரும் சேர்ந்து நல்லதோர் உலகைப் பாம் வாரீர் எனப்பரிவோடு அழைக்கிறார்!

யார் அவர்? எந்த ஊர்? யாருக்காக, யாரிடத்தில் இவ்வளவு அக்கரைகாட்டுகிறார்.

யார் பேசப்போகிறார்கள். இவ்வாறெல்லாம்? அமெரிக்கா பேசுகிறது—அமெரிக்க முதல் பேசுகிறது அமெரிக்கத்தூதுவர் கிரேடி துரை பேசுகிறார்.

வேறு யாருக்குத்தான் இவ்வளவு அக்கரை பிறக்கும்? மண்ணையும் விண்ணையும் நம்பி வயிற்றைக் கடவிக்கொண்டிருக்கும் நம்மைப் பார்த்தா பேசப்போகிறார்? அவருக்கானவரைப் பார்த்துப்பேசுகிறார். அதிகாரத்தில் இருப்பவர்களுக்காகப்பேசுகிறார். அவர்கள் மறைவில் உள்ள ஆலை அரசர்கள் காதில்விழுமென்று, தாம் வந்தவேலையை விளக்கிக்கூறுகிறார். வியாபாரச் சீமான்களுக்கு வாழ்வளிக்கும் சூக்ஷமத்தைத்தெரிவிக்கிறார்.

பம்பாய் திட்டம் எனும் பொருளாதார திட்டம் தீட்டியுள்ள பிர்லாவிற்கும் டாடாவிற்கும் பக்கபலமாக இருக்கத் தயார் என, அவர்கள் பரந்த அறிவைப்புகழ்கிறார். நல்ல சகிப்புத்தன்மையுடைய மக்கள் என்றும் கூட நற்சாட்சி அளிக்கிறார். ஏன் அளிக்கமாட்டார்? இந்திய சரித்திரத்தை அவர் படித்திருப்பாரன்றோ?

இந்தக் கிரேடி துரை யார்? இவரைக்குறித்து நாம் முன்னரே சில கூறியுள்ளோம். அமெரிக்காவிலுள்ள பெரிய பெரிய ஆலைப்பிரபுக்களின் பரம்பரையில் வந்தவர். கீழ்நாடுகளிலே நல்ல அனுபவம் உடையவர். அமெரிக்காவிலே உற்பத்தி செய்யப்படும் பண்டங்களுக்கு மார்க்கெட்டுத் தேடித்தருவதிலே கைதேர்ந்தவர். அந்த அரு பணியை ஆற்றுவதற்குத்தான் இங்கு வந்து இருக்கிறார். உலகத்தை முன்னேற்றுவதுதான் அவருடைய முக்கியபணி! ஆனால் அந்த உலகம் நம்முடையது அல்ல! அவர் வர்க்கத்தாருடையது! இந்தச் சிறியவேற்றுமைதான் உண்டு அவர் பேச்சில். அவர் உலகத்திற்கு அவர் செய்யும் பணி, நமது உலகத்திற்குப் பெரும் பிணியாகத்தான் இருக்கும். இது சமயம் எங்கும் அப்படித்தான் இருக்கிறது. இருந்தாலும் அவர் உலக முற்போக்கிற்குப் பாடுபடுவதிலிருந்து மாறமாட்டார்!

பரிவு, பாசம், பச்சாதாபம் முதலிய சாகசப் பேச்சோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. இவ்வாறெல்லாம் அவர் பேசுவதைத் தவறாகப்பொருள் கொள்ளக்கூடாதெனவும் இலகுவாக எச்சரிக்கிறார். இப்படியும் திரித்துக் கூறுவோரும் உண்டு; இருந்தாலும் அந்தகையவர் வாயுரையை உதறித் தள்ளுங்கள் என உபதேசிக்கிறார். அதே மூச்சில், அவருடைய நாட்டு வியாபாரச் சீமான்களின் மிடுக்கு பற்றியும் மிரட்டுகிறார். தங்களுக்குச் சாதகமான நிபந்தனைகள் மீது, இங்கு மட்டுமல்ல மற்றநாடுகளுக்கும் அந்தச்சீமான்கள் பொருள் உதவி செய்ய முனைந்திருக்கிறார்களாம். ஆனால், தங்களுடைய பொருளை 'வாங்கிக்கொள்ளுங்கள்' எனக்கெஞ்சுதல் செய்ய ஒருப்படவில்லையாம். பொருள் உதவி செய்வதின்மூலம் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை உதவிபெறும் நாடுகள்மீது செலுத்தப்பார்க்கிறது எனச்சந்தேகிப்போர், பகை உள்ளம் கொண்டவர்களாம்.

பொருள் உதவி மட்டுமின்றி, தொழில் நிபுணர்களையும், தேர்ந்த இயந்திரப் பயிற்சி உடையவர்களையும் உதவ, அமெரிக்கா ஆயத்தமாக இருக்கிறதாம். நூறு ஆண்டுகட்கு முன்னர்—ஏன் — ஐம்பது ஆண்டுகட்கு முன்புகூட ஏற்பட்டிராத வசதி, தொழில் துறையில் இன்று இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கிறதாம். இந்த, எதிர்பாரா இயந்திரசாதனைகளால் இந்தியாவிற்கு நல்லதோர் வாய்ப்பு உண்டாகி இருக்கிறதாம். இதனைக் கைநழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்வீர்களெனவும் முடித்துவிட்டார்.

இந்தியாவோடு அவர் பார்வை நின்றுவிடவில்லை. பாகிஸ்தானுக்கும் அவர்பஞ்சாங்கம் கூறுகிறார். யோகம் அடிக்கப்போகிறதெனச் சோதிடமும் சொல்லுகிறார். இத்துடனும் அவர் நிற்கவில்லை.

சோஷலிசத்தால், மனித சமுதாயத்திற்குச் சுகம் கிடைக்காதாம். முதலாளித்துவத்தால் தான் அந்தச்சுகம் சித்தியாகுமாகும். முதலாளித்துவத்தை, சமுதாயசத்துருஎனச்சிலர் சித்தரிப்பது வீண்பழியாம். அது ஒழுங்குடைய முறைபற்றதானாலும், அது ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதாம். எனவே சமுதாய வளர்ச்சிக்கு அதில் இடமிருக்கிறதாம். இம்முறைக்கு மாற்றாக உண்டாக்கின முறைகளெல்லாம் பயனற்றுப் போனதை வரலாறு மெய்ப்பிக்கிறதாம்.

சர்க்காரின் சிற்சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக்கொண்ட சுதந்திர முடையது முதலாளித்துவம் என, அமெரிக்க முதலாளித்துவ முறைக்குப் புதியதோர் விளக்கம் தருகிறார் துரை. இன்றைய பொருளாதாரப் பிரச்னைகள் சிக்கல் நிறைந்ததாக இருப்பதால், அரசியலார் கட்டுப்பாடு அவசியமாகிவிட்டதாம். கம்யூனிஸ்டுச் சர்வாதிகாரத்திற்கும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தனிநபர் லாபவேட்டை முறைக்கும் இடையிலோர் இடைப்பாதை ஏற்படுத்துவதுதான் இந்த முறையாம்.

மனித உழைப்பைக் குறைக்க, மனித உழைப்பின் சக்தியைப் பெருக்க, சிறந்த அறிஞர்கள்பலரின் பலநாள் உழைப்பால் உருவானதுதான் இயந்திர சாதனங்கள் அனைத்தும். எப்படியோ, எக்காரணத்தாலோ எத்தர்கள் சிலரின் சுயநலத்திற்கும், சுகபோகத்திற்கும் பயன்படும்முறையில் இயந்திரசாதனங்கள்

ஏற்பட்டுவிட்டன. உற்பத்தி பெருகியும், அதனை உபயோகிக்கத்தேவை பல உடையமக்கள் ஏராளமாக இருந்தும், அவர்களால் அந்தப்பொருளையும் வாங்கி அனுபவிக்கமுடிவதில்லை. மக்கள் தேவையைப்பூர்த்தி செய்யத் தகுதியுடைய இயந்திர சாதனங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையா? அந்த இயந்திரங்களை இயங்க வைத்துத் தலையானபண்டங்களைச் செய்துகுவிக்க ஆட்களுக்குப் பஞ்சமா? அந்த ஆட்களுக்குப் பயிற்சி தர அறிஞர்கள் இல்லையா? இவ்வளவுந்தான் இருக்கிறது. இருந்தும் இல்லாமையால் மக்கள் தவிக்கின்றனர். இவ்வளவிற்கும் காரணம் என்ன?

ஏற்கனவேபல இயந்திரசாதனங்கள் இருந்தும், தினம் தினம் புதிய புதிய இயந்திரங்களைக்கண்டுபிடித்துப்பழையனவற்றை மாற்றி அனைத்தும் உற்பத்திபெருக்கப்படுகிறது. இந்தச்சாதனங்கள் அனைத்தும் சிலரிடமே சிக்கி இருக்கிறது. அவர்கள் அதிகமான லாபத்தை எதிர்பார்க்கிறார்கள். உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு அதிகவிலைக்கு விற்றால்தான் அவர்களுக்கு இலாபம் ஏராளமாகக் கிடைக்க மார்க்கமுண்டு. அந்தச்சந்தையில், அதிக பணம் கொடுத்து இந்தப்பொருட்களை வாங்குகிறார்களோ அங்குதான், அவர்கள் விற்க முற்படுவார்கள். ஆரம்பத்தில் ஒருவர் இருவர் நடத்திவந்த இந்தத் தொழில், பணம் படைத்த பலரின் கண்ணையும் கருத்தையும் உறுத்தும் காலப்போக்கில். அவர்களும் அத்தொழிலை மேற்கொள்வர். போட்டி வலுக்கும். உற்பத்தி செய்த பொருட்கள் விலைபோகாமல் தேங்கிக்கிடக்கும். ஆலைகள் மூடப்படும். ஏழைத்தொழிலாளிகள் வெளியேற்றப்படுவர். வேலையின்றித் தவிப்பர். இந்நிலையில் சிலபலர் தம் தம் ஆலைகளை வந்தவிலைக்கு விற்றுவிடுவர். பணபலம் மிக்குடையவர்கள் அதனைக்கொள்வர். மீண்டும் அந்த ஆலைகளில் வேலை துவங்கப்படும் என்ற உறுதி இல்லை. போட்டியைக்குறைக்க, மூடப்பட்ட ஆலைகள் மூடப்பட்டே போய்விடும். மீதமுள்ள ஆலைகள் இலாபம் வரும் அளவிற்கு ஏற்பப் பொருட்களை உற்பத்தி செய்யும். தொழிலாளிகள் வயிற்றில் மண்ணை வாரி அடிப்பர். தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பர். இதுவே முதலாளித்துவமுறை.

உள்நாட்டிலே இதற்கு இலாப வேட்டை குறையுமானால், தன்னினும் தொழில்வளம் குறைந்துள்ள நாட்டில் வியாபாரஞ் செய்யவழி வகை செய்வதோடு, அந்தந்த நாட்டிலேயும் ஆலைகளை ஏற்படுத்தி, அங்குள்ள மக்களுக்குக் குறைந்த கூலியைக்கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கி, அந்தச் சந்தையிலேயே இலாப வேட்டையைத் தொடங்குவர். இதுவும் பலகாலம் நடப்பதில்லை. அங்குள்ள மக்களும் சிலகாலத்திற்குள் விழிப்படைவர். சுதேசியம்பேசுவர். சுதந்திரம் எனப்போர் தொடுப்பர். ஏதோ ஓர் வேற்றுமையைக் கிளப்பி, வெளிநாட்டு முதலைச்-சுரண்டலை ஒழிக்க முற்படுவர். மக்களின் ஆதரவும் வரவரப்பெருகும். அங்குள்ள பணமூட்டைகளும், வெளிநாட்டார் சுரண்டலில்பங்கு பெறும். பின்னர் ஆலை அரசுகளாகவும் மாறிவிடுவர். தேசியவிடுதலைக்கிளர்ச்சியின் மூல பலம் இதுவேயாகும். வேற்றுநாட்டவர் பிடிதளர்ந்த பின்னர், முன்னாள் விடுதலை வீரர்களின் பிடி பலப்படும். நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் ஆணை, ஆளுவோரை ஆட்டிப்படைக்கும். அவர்கள் ஏவல்வழி, ஆளுவோரும் அடங்கிக்கிடப்பர்.

மீண்டும் பழையபடி மார்க்கெட் தேடவேண்டும். மக்கள்தேவையினால் அலைவுறவேண்டும். வேலையற்றோர் தொகை பெருகவேண்டும். பசியும் பஞ்சமும் மக்களைப்பிடிக்கவேண்டும். இப்படியே சுற்றிச்சுற்றிவரும் இந்த முதலாளித்துவ நச்சுசூளை.

இத்துடன் அது நின்றுவிடுவதும் இல்லை. ஒரு நாட்டின்மீது போர் தொடுக்கவும், மற்றொரு நாட்டுக்கு ஊக்கமூட்டும். சென்ற முப்பது ஆண்டுகளுக்குள் இரு பெரும் போர் நமது கண்முன் நிகழ்ந்துவிட்டது. மக்கள்வாழ்வில் வளங் காணுவதா இவ்விரு போரின் நோக்கம்? ஜெர்மன் முதலாளித்துவ முறைக்கும், ஜப்பான் சீமான்களுக்கும் மார்க்கெட் தேடுவதில், ஏற்பட்ட வேதனை மிக்க விளைவல்லவா இது? மீண்டுமா இந்த அழிவுப் பாதையில் கால் வைக்க முயல்வது? அந்தப் பாதை, போர்களத்துக்கல்லவோ நம்மை அழைத்துச் செல்லும்? அப்பாதையைச் சீராக்கலாம்; புதியதாகச் செப்பனிடலாம்; பிறிதின்னுயிர் நீக்க ஒருப்படாத விரத மேற்கொண்ட பரிசுத்த மனதுடனும் அப்பாதையில் செல்லலாம்; வழிநடைச் சிரமம் தெரியாமல் இருக்க அகிம்சா பரமோதர்மேனும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேகூட அப்பாதையில் போகலாம்; முடிவென்ன?

அங்கு கால் முறிந்தவர் கதறல்—கைகள் ஒடிந்தவர் கூக்குரல், தலையற்ற முண்டங்களின் துடி துடிப்பு, இரத்தச் சேற்றிலே புதையுண்டு கிடக்கும் பிணங்களின் பரிதாபம்—இவைகள்தானே அங்கு காட்சிப் பொருட்களாக இருக்கும். காக்கை கழுகுகள்விருந்துண்ண, நரிகள் பசிதீர, மக்களையா கொன்று குவிப்பது? விலை மதிக்க ஒண்ணாத மக்களைப்பலியிட்டா, சிலரின் சுகபோகத்தை வளர்ப்பது—பாதுகாப்பது? நிற்க,

சமுதாயம் என்றும் மாறிக்கொண்டே இருக்கக்கூடியது. செயலற்று ஒரு சிறு நேரமும் இருப்பதில்லை. சமுகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் பொருளியல். சமுகத்திற்குத் தொல்லை உண்டாக்குவதற்காக ஏற்பட்டதல்ல. மனித வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் அம்முறை மாற்றமுறும். முந்திய கட்டத்தில் உயர்ந்ததெனக் கொள்ளப்பட்ட ஒரு முறை அடுத்த கட்டத்தில் பயன்படுவதில்லை. அது, பயனற்றமுறை என்று தெரிந்தும் அதனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தால், அதனால் பொதுவாக சமுகம் முழுவதிற்கும் நன்மை ஏற்படுவதற்குப் பதிலாக, சிலருக்கு நன்மையும் மற்றவர்க்குக்கேடும்தரும் நிலை ஏற்படும்.

முதலாளித்துவமும், சமுதாய முற்போக்கிற்கு ஒரு காலத்தில முக்கியம் தேவையுடைய பொருளியல் முறையாக இருந்தது. அத்தேவை முடிவடைந்துவிட்டது. சமுகத்திற்கு நன்மை செய்யும் நல்லியல்புகள் பலவும், முதலாளித்துவத்தில் இன்று நசித்துப்போயின. சிலரின் லாபப் பெருக்கத்திற்கு உதவி செய்யவும், மற்றவர்களுக்குத் தீராத்தொல்லைகள் பல தரவும் தகுதியுடைய பொருள் இயல் முறையாகத்தான் இன்று முதலாளித்துவமும் இருக்கிறது. இம்முறையைத் தொலைத்துத் தலைமுழுகவேண்டும். இதனை நன்கு உணர்ந்து இருக்கிறார், அமெரிக்க முதலாளிகளின் பிரதிநிதியான கிரேடி துரை. அதனால்தான் 'முதலாளித்துவம் முழுதும் ஒழுங்கு

டையது அல்லவாறாலும் சிறந்தது' எனச் சித்தரிக்கிறார். கிரேடிவர்க்கத்தினருக்குச் சிறந்தது என்று கூடச் சொல்வதற்கில்லை. அவர்களையும் முடிவில் அழித்துவிடக் கூடிய நச்சுத்தன்மையை இன்று முதலாளித்துமுறை பெற்று விட்டது. அதனைச் சீர்படுத்திச் செப்பனிட்ட போதிலும், அதனால் இனி எவருக்கும் ஒருதுளியும் நன்மை ஏற்படப்போவதில்லை. அதனை அழிய விட்டுவிட்டு, அந்த இடத்தில வேறு ஒருமுறையை மேற்கொள்வதே மனிதமுற்போக்கில் அக்கரை கொண்டுள்ளவர்கள் செய்யக்கூடிய நற்செயலாகும். அதுவே சோஷலிச முறையாகும். சோவியத்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு, நல்ல முறையில் நடைபெற்று வருவதாகும். இங்கிலாந்திலும் சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கையாளப்படுகிறது. ஆரம்ப நிலை; நல்ல பலன் தர நாள் பல செல்லும்.

சோஷலிச முறையை அமுல் நடத்துவதில் இருநாடுகளும் வேவ்வேறு சாதனங்களைக் கையாளுகின்றன. அந்நாட்டு மக்களின் பரம்பரைப்பண்பாடும், மனவளமும், மற்றச் சூழ்நிலையும், இதனை எவ்வாறு அமுல் நடத்துவதெனத் தீர்மானித்தற்குத் துணை செய்கின்றன. இல்லாத சூழ்நிலையை ஒரே நாளில் ஏற்படுத்தி விடுவதென்பது முடியாத காரியம். நிர்வாகஞ் செய்வதில் மாறுபாடு இருந்தபோதிலும், அடிப்படைத் தத்துவத்தில் முரண்பாடு கிடையாது. சமுதாயம் முழுதுக்கும் ஏற்படுகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் சோஷலிசம். இதுவே காலத்திற்கு ஏற்ற பொருள் இயல். இதை அழித்துவிட முடியாது. இதனை உலகம் முழுவதிலும் ஏற்படுத்துவதில் காலதாமதம் உண்டாகலாம்.

முதலாளித்துவத்தின் பயனற்ற-பயங்கரமான தன்மை இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் விளக்கமாகத் தெரியவந்தது. இருந்தாலும் 1914-18 பெரும்போர் அமெரிக்காவின் முதலாளித்துவ முறைக்கு ஆக்கம் அளித்தது. இதன் பலனாக அங்கு முதலாளித்துவம் கொழுக்க ஆரம்பித்தது. மீண்டும் இப்பெரும் போரின் விளைவாக, முன்பு உண்டானது போன்றதோர் முதலாளித்துவ முறைக்குசெல்வாக்குஏற்படுமெனக், கனவு காண்கிறார் கிரேடி துரை. இவர் மட்டுமென்ன? சகல நாடுகளிலும் உள்ள பண மூட்டைகள், மாறு மனத்தினர், அதே கனவைத் தான் காண்கின்றனர். அமெரிக்கச் செல்வர்களின் கூட்டுறவால்மீண்டும் அந்த ஆகாத முதலாளித்துவத்தை அரியாசனத்தில அமர்த்தலாம் என அவர்கள் நம்பி இருக்கின்றனர்-முயலுகின்றனர். அத்தகைய தகாத முயற்சியில் முதல் இடம்பெற்றிருப்பதுதான் பம்பாய் திட்டம். இதனையுணர்ந்துள்ள காரணத்தால தான் கிரேடி துரை, அத்திட்ட கர்த்தாக்களின் அறிவைப் போற்றுகிறார்.

முதலாளித்துவம்இளமை பெருகு குறையாமல் இருந்தகாலத்தில், ஆளும் உரிமையில் ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கவேண்டும் என்கிற அரசியல் மக்களாட்சி முறைதத்துவம் அரசியலில் இடம் பெற்றது. மக்களுக்கே முடிந்த ஆளும் உரிமை என்பது சிக்கல் நிறைந்த பிரச்னையாகும். இன்றும் தெளிவாக அறுதியிட்டுக் குறித்துக் காட்ட முடியாத ஒன்றாகத்தான் அது இருக்கிறது. மக்களாட்சி எனும் எண்ணம் அறிஞர்கள் சிந்தனையில் ஜனித்தது முதல், அதுபற்றி எழுந்தவாதப் பிரதிவாதங்களும், விளக்கங்களும் வேண்டிய அளவுக்கு இருக்கின்றன. நிறைவுபெற்ற மக்களாட்சி முறையை உலகில் எப்பகுதியிலும் காணமுடியவில்லை. அறிவு படைத்த சிலரின் நடவடிக்கையாகவே ஆட்சி முறை இருக்கிறது. பெயருக்கேற்பப் பொருள்படும் மக்கள் ஆட்சி முறை நடைமுறையில் இல்லையாயினும், மக்கள் ஆட்சி முறையால் மக்களுக்கு ஏற்படும் நற்பயன்கள் அனைத்தும் கொடுக்கின்ற ஆட்சிமுறை சோஷலிசம் ஒன்றில்தான் காண முடியும்—பெற முடியும்.

முதலாளித்துவ அமைப்பில் மக்கள் ஆட்சிமுறை சொல்லளவில்தான் இருக்கமுடியும். மக்கள் ஆட்சியின் முழுப்பயனையும் மக்கள் பெறமுடிவதில்லை. மக்கள் ஆட்சி எனும் பெயர் கூறிச் சூது மதியினர்— சூழ்ச்சியில் தேர்ந்தவர் சிலர்—மக்களை மயக்கித் தங்கள் சொந்த வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வர். இதனை மக்கள் காலப்போக்கில் கண்டுகொள்வர். மக்களின் உரிமை வேட்கை, இக்கயவர்களின் கவனத்தை ஈர்க்கும். மயக்க வார்த்தைளால் மக்களின் எழுச்சியை அடக்க முடியாதென்று இவர்கள் உணர வந்ததும், சொல்லளவில்உள்ள மக்கள் ஆட்சித் தத்துவத்தையும் குலைத்துவிடுவர். அதிகாரத்தைக்கொண்டு முளையிலேயே கிள்ளி எறிவர், மக்களின் உரிமை எண்ணத்தை. அதற்கான சட்டதிட்டங்களைமுன்னேற்பாடாக இயற்றிக்கொள்வர். மேலும் மக்கள் வீறுகொண்டு எழுவரேல், தடியடியும், துப்பாக்கிக்குண்டும், சிறைக்கோட்டமும், சித்திர வதையும், தூக்குமேடையும் அன்னார்களுக்குப் பரிசாக வழங்குவர். சிந்தனையைச் சீரழிப்பர். மக்களை மந்தமதியினர் ஆக்குவர். மக்கள் ஆட்சி எனஆரம்பத்தில் பேசிவந்த முதலாளித்துவம், அழிவை நெருங்கிவிட்ட பின்னர் கொடுத்த-கொடுக்க இருக்கும் பரிசு இதுவே. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, இந்தக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்வதாலும் கூட முடிவதில்லை. முதலாளித்துவத்தைக் காப்பாற்ற முதலில் இத்தாலியும், பின்னர் ஜெர்மனியும் எடுத்துக் கொண்ட நடவடிக்கை இதுவேதான். இதன் பெயர்தான் பாசிசம்.

ஹிட்லரோடும் முசோலினியோடும் பாசிசம் அழிக்கப்பட்டு விடவில்லை. அந்த இரு நாடுகளில் மட்டுந்தான் பாசிசம் வளரும் என்ப

(7-ம் பக்கம் பார்க்க)

M. N. ராயின் தமிழ் மொழிபெயர்ப்பு
'நவசகாப்த சமூகம்'
விலை 0—8—0 :—
:— தபால் செலவு 0—2—0
கி. பிச்சமூர்த்தி தீட்டியது.
"கதவு திறந்தது"
கலைமணிகள்
கிருஷ்ணன்—பாகவதர்
பற்றியது.
C. N. அண்ணாதுரை முகவுரையுடன்
விலை 1—0—0 :—
:— தபால்செலவு 0—3—0
வியாபாரிகளுக்கு 20% கழிவு
அறிவுச்சுடர் பதிப்பகம்
துறையூர் :: திருச்சி ஜில்லா

Edited Printed Published by C N Annaduarai, M. A., at "Dravida Nadu" Press.
317—319 Hodgsonpet Conjeeveram.